விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஞூ பங்குனி மீ 07-ம் உ | செவ்வாய்க்கிழமை | (20 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 22 | ஓசை 30

## பொலிசாருக்குப் பணியாதவர்கள் புலிகளுக்குப் பணிந்தனர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் வீதி ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறிய சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த சிலர் சிறிலங்கா பொலிசாரின் பணிப்புரையையும் அலட்சியம் செய்ததையடுத்து தமிழீழ விடுதலைப் புலியினர் விமானப்படையினரை ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளச் செய்தனர்.

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு நகரில் வீதி ஒழுங்குக் கட்டுப்பாடுகளை அமுல் நடத்தி வந்த பொலிசாரின் பணிப்புரைகளைச் சிலர் உதாசீனம் செய்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலியினரும் இக்கடமைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். நேற்று இலங்கை விமானப்படையைச் சேர்ந்த சிலர் வீதி ஒழுங்குமுறைகளை மீறித் தங்கள் வாகனத்தை (6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு பகுதி எங்கும் அன்னை பூபதி நினைவுநாள்

## உண்ணாவிரதங்கள், அஞ்சலிக்கூட்டங்கள்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு பந்தனையற்ற போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஈராண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் வடக்குக்-கிழக்கு மாகாணம் எங்கும் நேற்று ஆரம்பமாகியது-

### கிழக்கில் சுழற்சிமுறை உண்ணாவிரதம்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பகுதிகளில் அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிகள் முகத்துவாரம் மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடந்த விசேஷ பூஜை பிரார்த்தனைகளுடன் ஆரம்பமாகின. தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலனும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

இதே மாமாங்கப்பிள்ளையார் ஆலய முன்றலில் தான் புலிகளுடன் நிபந்தனையற்ற (6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். நகரில் நினைவஞ்சலி

"தமிழ் மக்களின் விடிவுக்காக அன்னை பூபதி சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு, தனது இன்னுயிரை நீத்தார். இத்தகைய செயலானது அன்னை பூபதியின் வீரத்தையும் தியாகத் (6 ஆம் பக்கம் பார்க்க)

மாநகரசபையின்

## போக்குவரத்து விதிகளுக்கு விடுதலைப்புலிகள் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் வீதி ஒழுங்கு விதிமுறைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளனர்.

மக்கள் இவ்வொழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து கடமையில் ஈடுபட்டுள்ள மாநகர சபை ஊழியர்களுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறும் அவர்கள் மக்களை வேண்டிக் கொள்கின்றனர்.

இந்திய இராணுவ

## காங்கேசன், பலாலி தவிர்ந்த முகாம்கள் மூடப்பட்டுவிட்டன

(காங்கேசன்துறை)

பலாலி - காங்கேசன்துறை வீதியைத் தவிர்ந்த சகல இந்தியப் படை முகாம்களும் மூடப்பட்டு விட்டன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்பாக அமைக்கப்பட்டிருந்த முகாமும், நடேஸ்வராக் கல்லூரிச் சந்தியில் அமைந்திருந்த சென்றியும் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டு நடைபவனியாகவும், வாகனங்கள் சகிதமும் இராணுவத்தினர் வெளியேறினர்.

இராணுவத்தினரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து மாவிட்டபுரம், காங்கேசன்துறை மக்கள் மகிழ்ச்சி ஆர (6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய இராணுவத்தால் வர்த்தகர்களுக்கு 20 லட். நஷ்டம்

(மட்டக்களப்பு)

தமிழ் தேசிய இராணுவம் அமைக்கப்பட்டதன் எதிரொலியாக மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 15 இலட்சம் ரூபா முதல் 20 இலட்சம் ரூபா வரை என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

மேற்படி வர்த்தக நிலையங்களிலிருந்து உணவுப் பொருட்கள், உடுதுணி வகைகள், பாத்திரங்கள், அத்தியாவசியப் பொருட்கள் என்டன கொள்வனவு செய்யப்பட்டன.

துப்பாக்கி முனையில் கொள்வனவு என்பதால் வர்த்தகர்களால் எதுவும் செய்ய முடியவில்லையாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் தமிழ் இளைஞர் ஆயுதங்களுடன் கைது!

### போதைப் பொருளும் பிடிபட்டது!

(கொழும்பு)

தென்பகுதியில் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் கொள்ளைகளிலும், போதைப்பொருள் கடத்துவதிலும் ஈடுபடுவதினால் அங்கு வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பீதி நிலவுகின்றது.

நேற்று சோகுவல என்னும் இடத்தில் இரண்டு கிலோ கிறேயின் போதைப் பொருளுடன் ஒரு தமிழ் இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது. இதன் பெறுமதி ஏறத்தாள இருபது லட்சமாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி. சந்திப்பில் நேற்று முன்தினம மினிபஸ் ஒன்றும் மோட்டார் சயிக்கிள் ஒன்றும் மோதியதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல்லா அஸீஸ் (வயது 33) பலியானார். (20)

## போப்பரின் சிறப்புப் பிரதிநிதி யாழ். வருகை

## அமைச்சரவையிலும், ஆளும்

## ஜீ. சீ. ஈ. சாதாரண பரீட்சை பின்போடப்பட மாட்டாது

## போப்பரின் சிறப்புப் பிரதிநிதி யாழ். வருகை

(விசேட நிருபர்)

பாப்பரசரின் சிறப்புப் பிரதிநிதி மகாவந்-பிரான் சுவாபைக்கே கருதினால் அவர்கள் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு விசேட சமய சுற்றுலா மேற்கொண்டுவர இருப்பதாக யாழ். ஆயர் கலாநிதி மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த பாப்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## 'மே'யில் முறைசாராக் கல்வி பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விரைவில் முறைசாராக்கல்வி பயிற்சி நெறிகளுக்கான பரீட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டுவிடும் என்றும் அநேகமாக மே மாதம் இரண்டாம் திகதியளவில் பயிற்சி நெறிகள்ஆரம்பிக்கப்படுமென முறைசாராக்கல்விகளுக்கு பொறுப்பான அதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவிக்கிறார்

அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மையில் நடத்தப்பட்ட முறைசாராக்கல்விகளுக்கான பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படுவதில் சில நடைமுறை சிக்கல்கள் இருப்பினும் தாம் பெருமுயற்சி செய்து இவற்றைத் திருத்த முயற்சி செய்வதாகவும் தெரிவித்தார். (லோ)

திருமலையில்

## ரூபா 4 இலட்சம் பெறுமதியான வெடிமருந்து பிடிபட்டது

(திருக்கோணமலை)

16 சாக்கு வெடிமருந்தை திருக்கோணமலையில்வெள்ளியன்று பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். சென்றல் றோட்டுக்குப் பக்கமாகவுள்ள கடற்கரையில் ஆளமில்லாத பகுதியில் இச்சாக்குகள் புதைக்கப்பட்டிருந்தன.

ரூபா 4 இலட்சம் பெறுமதியுள்ள இவ்வெடிமருந்தின் எடை 450 கிலோ என்று இன்ஸ்பெக்டர்நளின்பெரேரா தெரிவித்தார்.

## பனை அபிவிருத்தி சபையின் சமூக பொருளாதார ஆய்வு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினால் பனைவள ஆராய்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் உதவியின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக் கழகத்தின் உதவியுடன் ஆய்வொன்று பனைவள அபிவிருத்திச்சபை மேற்கொள்ளவுள்ளது.

இவ் சமூக பொருளாதார ஆய்விற்கு யாழ். பல்கலைக் கழகத்தின் பல்துறைப் பேராசிரியர்களும் தமது துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# அமைச்சரவையிலும், ஆளும் கட்சியிலும் களையெடுப்பு!

## அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராக ஜனாதிபதி பிரேமதாஸா நடவடிக்கை

(கொழும்பு)

ஆளும் கட்சியைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கடும் நடவடிக்கைக்குள்ளாகவிருப்பதாக ஆளும் கட்சிக் கூட்டத்தில் அவரே தெரிவித்தார்.

இம்மூன்று எம். பி. க்களும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழப்பதுடன் அவர்கள்மீது மேல் நடவடிக்கைகளும் எடுக்கப்படவிருப்பதாகத்தெரிகிறது.

இதே சமயம்இம் மாதம் இருபத்தாறாம் தேதி நடைபெறவிருக்கும் பாராளுமன்ற அங்கத்தவர் விசேஷ கூட்டத்தின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் ஆயுதம் மீட்பு

(திருக்கோணமலை)

ஈ.பி. ஆர். எல். எவ் திருக்கோணமலையை விட்டுவெளியேறியபிறகு, விடுதலைப் புலிகள் நகரத்தின் மத்தியில் பல இடங்களில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை தேடி எடுத்து வருவதாகத் திருகோணமலையில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பொதுமக்களின் ஒத்துழைப்புடன்பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

## மும்மொழிகளிலும்நிர்வாக சேவை இடம்பெற வேண்டும்

- ஜனாதிபதி

(புத்தளம்)

நிர்வாக சேவைகள் மும்மொழிகளிலும் இடம் பெற வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் புத்தளத்தில் தெரிவித்தார்.

அமைச்சு செயலாளர்களும், மாகாணசபை செயலாளர்களும், அரசாங்க சேவைகளுக்கு ஆள் சேர்க்கும்போது, அரசியல் வாதிகளின் கடிதங்களையும், பெயர்ப் பட்டியல் களையும், அமைச்சர்கள் அனுப்பும் சிபார்சுக் கடிதங்களையும் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை என்று ஜனாதிபதி பிரேமதாஸா. நேற்று முன்தினம் ஜனாதிபதி நடமாடும் சேவை தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரிஸா அகதி முகாமில் இருந்து தப்பியோட்டம், கைது.

(புவனேஸ்வரர்)

ஒரிஸாவிலுள்ள அகதி முகாம்களுக்கு கொண்டுசெல்லும் வழியில் இடை முகாம்களில் இருந்து தப்பியோடிய இலங்கைத் தமிழ் அகதிகளில் 40பேர் பிடிபட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இடை முகாம்களில் இருந்து பலர் தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த புதன் கிழமை இரவு தப்பியோடியவர்களில்தான் 40 பேர் பிடிபட்டதாகவும் அவர்கள் திருப்பி முகாமுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் ஒரிஸாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகள் மேலும் தப்பியோடாதிருக்க 20 இடங்களில் சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. முகாம்களின் உள்ப் பகுதியில் நுழையும் வாகனங்களும், அங்கிருந்து வெளியேறும் வாகனங்களும் தீவிர சோதனையிடப்படுகின்றன.

போரப்பூர் மாவட்ட குடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கொடித்தினம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க புனர்வாழ்வு வேலைகளை நடாத்தும் நாடளாவிய கொடித்தினம் பாடசாலைகளில் 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறும்.

பொதுமக்களிடம் 27ஆம் திகதி நடைபெறும். இதற்கு ஆதரவு தருமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது

## ஜ. ச. ஈ. சாதாரண பாடசை பின்போடப்பட மாட்டாது

(யாழ்ப்பாணம்)

க. பொ. த சாதாரணப் பரீட்சைகள் இனிமேல் எக்காரணம் கொண்டும் பின்போடப்படமாட்டாது. மாணவர்கள் மத்தியில் முஸ்லிம் மக்களின் நோன்பு பெருநாளை முன்னிட்டு சாதாரண தரப் பரீட்சைகள் பின்போடப்படலாம் என நிலவும் வதந்திகள் உண்மைக்குப் புறம்பானவை என யாழ்ப்பாண கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)

## மாணவர்கள் கைகலப்பு இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு வருடங்களின் பின் நடைபெறும யாழ் மத்திய கல்லூரி பரியோவான் கல்லூரி கிரிக்கெற் போட்டிகளுக்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. மாணவர்கள் தத்தமது பாடசாலைகளுக்கான ஆதரவை தேடுமுகமாக வாகனங்களிலும் துவிச்சக்கரவண்டிகளிலும் கோஷங்களை எழுப்பியவாறு நகரில் பவனிவருகின்றனர். கல்லூரிக் கொடிகளை நகரில் சாதாரணமாக காணக் கூடியதாக உள்ளது

நேற்றுமாலை இவ்வூர்வலம் பாடசாலைகளுக்கிடையிலான மோதலாக மாறியது. யாழ். புகையிரத நிலையத்தில் மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டதில் இரண்டு மாணவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். (லோ)

## இந்திய இராணுவத்தின் மின்கட்டணத்தை மக்களிடம் கோருவது அநியாயமானது

(பண்டத்தரிப்பு)

இந்திய இராணுவம் தங்கிய வீடுகளில் பாவிக்கப்பட்ட மின்சாரக்கட்டணத்தை அந்த வீடுக்காரரே செலுத்த வேண்டும். என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைச் செலுத்தாவிட்டால் மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பலரது வீடுகளில் இவ்வாறாக இந்தியப்படையினர் மின்சாரத்தைப் பவித்து சென்றுள்ளார்கள்.

தாம் இடம்பெயர்ந்து சென்றதாகவும் தமது வீடுகளில் பெறுமதி மிக்க பொருட்கள் காணாமல்போயுள்ளன. இந்த வேளையில் இப்படி எம்மை மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துமாறு கேட்பது நியாயமில்லை என மக்கள் கேட்கிறன.

## லோரன்சிற்கு அஞ்சலிகள்

(யாழ்ப்பாணம்)

சிறுநீர்க் கோளாறு காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் லோரன்ஸ் என்பவர் காலமானார். இவர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ்ப்பாணத்தில் சோக கீதங்கள் இசைத்தவண்ணமுள்ளன.

வரிவிளம்பரம்

விருப்பேஸக்கு

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

கருவாட்டுக்கு உகந்த அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M
No. 777, K. K. S. Road,
JAFFNA.

### சமூகக்கல்வி

ஆண்டு 6 சமூகக்கல்வி வரலாறு செயல்நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை யாழ்ப்பாணம். B/313


# மாணவர்களிடம் இலக்கியத் துறையை ஊக்குவிக்க யாழ்ப்பாணக் கல்லூரியில் திட்டம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதன் மாணவரிடையே கலை, இலக்கிய ஆர்வத்தை வளர்க்கவும், ஆக்கத் துறையில் ஈடுபடுத்தவும் கலைத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஒரு தலைசிறந்த இலக்கியப் படைப்பாளர்அறிமுகம்செய்து வைக்கப்படவுள்ளார்.

இலக்கியங்களை துய்த்துணர்ந்து ரசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்து முகமாக ஆக்கங்களும், எழுத்தாளர்களும் ஆக்க இரசனை பொங்கும் வகையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளனர்.

நாடகங்களும் தவணைக்கு ஒன்று என மேடை ஏற்றப்படவுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசனால் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் கலைத் திட்டம் எதிர்கால மக்களிடையே இலக்கிய ஆர்வத்தையும், ஊக்கத்தையும், விமர்சனத் திறமைகளையும், நாடக உத்திகளையும் வளர்க்கும் என்பதால் அதிபரின் முன்னோடித் திட்டத்தை பலரும் வரவேற்றுப் பாராட்டுகின்றனர்.

முதலில் சத்தியவான் சாவித்திரி நாடகம் மேடை ஏற்றப்படவுள்ளது. நாடகத் தயாரிப்பு உத்திகளை மாணவர் அறியவும், தெரியவும் துணையாக ''அக்சிடென்ற்'' ''தண்ணீர் தண்ணீர்'' ''வீடு'', ''பிறவி'' ''கி. பி. ஐ. டயறி ஆகிய மலையாளப் படங்களும், பிரஜாசக்தி, ''அச்சமில்லை அச்சமில்லை'' ஆகிய தெலுங்குப் படங்களும், ''நாயகன்'' எனும் பிரெஞ்சு மொழி கலைப் படமும் தெரிவு செய்யப்பட்டு காண்பிக்கத்தொடங்கியுள்ளனர்.

# குடத்தனை கிராமத்துக்கு உதவி அதிகாரிகள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கிராமிய தற்சார்பு வளர்ச்சித்திட்டத்தையாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பின் தங்கிய ஐம்பது கிராமங்களில் ஊற்று நிறுவனம் அமுல் செய்து வருகின்றது.

இதன்படி குடத்தனைக் கிராமத்தில் இதன் செயற்பாடுகளைக் கண்டறிய அமெரிக்க நிதியுதவி ஸ்தாபனத்தின் நான்கு அதிகாரிகள் இங்கு வந்திருந்தனர்.

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இவர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றபோது, இக்கிராமிய மக்களின் பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

திரு. எட்வேட் கிளாசியர் தமது பதிலுரையில், மக்கள் தற்போது இங்கே சுதந்திரமாக நடமாடுவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

இளைஞர்கள் கழகம் மூலமாகத் தற்சார்பு வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறிய அவர், எப்படியான வழிமுறைகளில் கிராமங்களின் அபிவிருத்திக்கு அமெரிக்க அரசு உதவி செய்ய முடியும் எனவும் ஆராயவே இங்கு வந்ததாகச் சொன்னார்.


அப்பப்பா! என்ன வெயில்!!
ஆம்!
இருக்கவே இருக்கிறது
இன்று
நெல்லியடியில்
யானை மார்க் சோடா
குளிர் பானம்
ஏக விநியோகஸ்தர்கள்
சுவர்ணாஸ்
நெல்லியடி
(B/326)

யாழ் நகரில் இன்றைய சினிமா

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா
பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை

நவநாகரீக உலகில் நாளுக்கு நாள் மாறும்
வண்ண வண்ணப்
புடவைகளை
எண்ணம்போல் தெரிவு செய்ய
புதியதோர்
வண்ணப் புடவைப்
பூஞ்சோலை
ஹப்பி ரெக்ஸ்ரைல்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(B-322)

மோட்டார் சயிக்கிள்,
டிரக்டர்,
லாண்ட் மாஸ்டர்
லொறிகள்
ஆகியவற்றின்
உதிரிப் பாகங்களை
நீங்கள்
நம்பிக்கையுடன் பெற
லிபேர்ட்டி மோட்டோர்
ஹவுஸ்
நெல்லியடி, கரவெட்டி
(B/327)

வளர்க! ஈழநாதம்
தமிழ்ப் பூங்கா
அச்சகம்
நெல்லியடி, கரவெட்டி
(B/ 321)

ஈழ நாதம் வளர்கவென
வாழ்த்துகிறோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தைக்
கிள்ளாதே

ஈழ நாதம் வளர்கவென
வாழ்த்துகிறோம்.

ஆனந்தா ஸ்ரோர்ஸ்
**ANANTHA STORES**
பலசரக்கு விற்பனையாளர்கள்
நெல்லியடி, கரவெட்டி.
(B/322)

செல்லமுத்தூஸ்
மெயின் வீதி, நெல்லியடி, கரவெட்டி.
மங்கையர் மனங் கவரும்
தற்கால நாகரிகத்திற்கேற்ற
அழகிய சாறி வகைகள்
கூறை வகைகள்
ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங், ஜீன்ஸ்
வகைகள் மற்றும் சகலவிதமான
ஜவுளி வகைகளுக்கும்
நெல்லை நகரில் பிரபல்யம் மிக்கவர்கள்
***Specialists In Blouse Pieces***
SELLAMUTHUS
Main Street, Nelliady, Karaveddy.
(B/320)

கூட்டுறவே நாட்டுயர்வு

யாழ். குடாநாட்டில் கைத்தொழில் அபிவிருத்திக்காக
செயற்பட்டு வரும் ஒரேயொரு
கூட்டுறவு ஸ்தாபனம்

பண்டத்தரிப்புப்
பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

தற்கால நாகரீகத்திற்கேற்ப விதம் விதமான முறையில் சேட் வகைகள், சூட்டிங், சேட்டிங், சோட்ஸ்வகைகள் குறிதத தவணையில், தரமானமுறையில் சிறந்த தையல் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்தும் சுவைமிகுந்த பாண், பிஸ்கட் வகைகள் தரம், மணம், குணம் குன்றாத முறையில் செய்து வழங்குவதிலும் மக்களின் தேவைகளை வழங்கிச் சேவை செய்யும் ஒரேயொரு கூட்டுறவு நிறுவனம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

தொலைபேசி: தலைமை அலுவலகம் 808 பண்டத்தரிப்பு
மொ. வி. நிலையம் 36 பண்டத்தரிப்பு
(B/328)

10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தைக்
கிள்ளாதே

மகாபொல மாணவர்கள்

## பொதுக்கூட்டம்

மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்கு பண்டாரகம செல்வதற்கான ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்கான பொதுக் கூட்டம் ஒன்று கைலாசபதி கலையரங்கில் 22ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதனால் மகாபொல பரிசில் பெறும் யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளோட்டம்

(புங்குடுதீவு)

''புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அளப்பெரும் சேவையை நான் பாராட்டுகிறேன். இச்சங்கத்தின் தலைவர் நெறியாளர்கள் மற்றும் இங்குபணியாற்றும் ஊழியர்கள் அனைவருமே சேவை மனப்பான்மையுடனும் விசுவாசத்துடனும் பணிபுரிந்து வருகின்றனர்.

இப் ப. நோ. கூ. சங்கத்தினால் புதிதாகப் பெறப்பட்ட உழவு யந்திரத்தின் 'வெள்ளோட்ட விழாவில்' பிரதம விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றிய யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சந்திரசேகரம் குறிப்பிட்டார்.

மேற்படி சங்கத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் அவர்களின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

# லிபியாவின் ரசாயனத்தொழிற்சாலை அழிந்ததையிட்டு அமெரிக்கா பூரிப்பு

(வாஷிங்டன்)
லிபியாவின் றபேட்டா இரசாயனத் தொழிற்சாலை நெருப்பினால் செயலிழந்ததையிட்டுத் தான் சந்தோஷப்படுவதாகவும் ஆனால் அமெரிக்கா நாசவேலையில் ஈடுபடவில்லையன்று சென்ற சனியன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஸ் தெரிவித்தார்.

இந்த நாச வேலையின் பின்னணியில் அமெரிக்காவின் கை இருந்திருக்க வேண்டும் என்று சனியன்று லிபியா குற்றம் சாட்டியது. இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைச் செயலிழக்கச் செய்வதற்கு அமெரிக்காவும், இஸ்ரேலும் தான் காரணம் என்று லிபியா நம்புவது அர்த்தமற்றது என்று அமெரிக்கா மறுத்து வருகிறது.

நாசவேலை தொடர்பான லிபியாவின் அறிக்கை வெளிவருமுன் அமெரிக்க ரேடியோ புஷ்சைப் பேட்டி கண்டபோது இச் சம்பவம் நாசவேலையா அல்லது தற்செயல் நிகழ்ச்சியா என்பதைத் தான் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்று அவர் தெரிவித்தார்.

எந்த விதப் பயமும் முரண்பாடும் இன்றி அமெரிக்கா எந்த வித நாசவேலைகளிலும் ஈடுபடவில்லை என்று நான் கூறியிருந்தேன். ஆனால் இந்த தொழிற்சாலை மனிதரைக் கொல்லும் இரசாயனங்களைத் தயாரிப்பதால் தான் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட அழிவைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று புஷ் கூறினார்.

புஷ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் லிபியத் தலைவர் கடாபி இதை நாசவேலை என்று கருதுகிறார் என்றும், இதுவரை இதுபற்றி எமக்கு ஒன்றும் தெரியாது என்றும் கூறினார்.

## கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கு யாழ். இந்துவில் வகுப்புக்கள்

(பண்டத்தரிப்பு)
கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடத்தப்படுகின்றன.

முதல் வகுப்பு மார்ச்மாதம் 11ஆந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொடக்கி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சங்கம் இவ் வகுப்புகளை ஒழுங்கு செய்து நடத்துகின்றது.

கிறிக்கற்றில் ஆற்றலும் அனுபவமும் உள்ள வல்லுனர்கள் மூலம் விரிவுரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வகுப்புகள்முடிந்ததும் பங்குபற்றியவர்களுக்கு ஒருதேர்வுப் பரீட்சையும் யாழ்ப்பாணம் கிறிக்கற் மத்தியஸ்தர்கள் சங்கம் நடாத்தத் தீர்மானித்துள்ளது. (12)

## கோத்தணி மட்டத்தில் நெடுந்தீவில் தவணைப்பரீட்சை

(நெடுந்தீவு)
நெடுந்தீவுகொத்தணிப்பாடசாலைகளின் முதலாம் தவணைப் பரீட்சை கொத்தணி மட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளில் நெடுந்தீவுகொத்தணி ஆசிரியர்களின் பரீட்சைக் குழு ஈடுபட்டுள்ளது. முதலாம் தவணைக்குரிய பாடத்திட்டங்களுக்கும் கற்பிக்கப்பட்ட பாட அலகுகளுக்கும் அமைவாகவே பரீட்சைக்கான வினாக்கள் தயாரிக்கப் படவுள்ளதாகப்பரீட்சைக் குழுவினர் தெரிவித்தனர்.

பரீட்சையின் அனைத்துப் பொறுப்புக்களையும் நெடுந்தீவு கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு.இரா. சின்னத்தம்பி மேற்பார்வை செய்வார்.

யாழ். மாவட்டத்தில்

## 65 லட்ச ரூபா செலவில் முறைசாராக்கல்விநிலையம்

(பண்டத்தரிப்பு)
முறைசாரா கல்விவளநிலையம் 65 லட்சம் ரூபா செலவில் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.

இவ்விரண்டு மாடிக்கட்டிடம் நவீன வசதிகளுடன் அமைப்பதற்கான வரைபடம் தயாராகி விட்டது.

ஏப்பிரல் மாத முதல்வாரத்தில் அத்திவாரம் இடப்பட்டு கட்டுமாண வேலைகள் தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடவேலை ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபாவை பன்முகப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளது.

அமைக்கப்பட இருக்கும் முறை சாராக்கல்விவள நிலையக்கட்டிடம், நூலகம், முறைசாராச் கல்விப் பயிற்சிக் கூடம் விடுதி, அலுவலகம், தொழிற் கூடம், விற்பனைச்சாலை, வகுப்பறைகள், மகாநாட்டு மண்டபம், வாகன தரிப்பிடம் என்பன கொண்டதாக அமையவுள்ளது.

இலங்கையிலேயே முதலாவது கல்விவள நிலையமாக அமையப் போகும் இந்நவீன தொழிற் கூடம் யாழ். மாவட்டத்தின் முறைசாராக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் எடுத்த அயரா முயற்சியின் பயனாகவே அமைக்கப்படுகின்றது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு அருகாமையில் இதற்கான நிலம் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப துப்பரவாக்கல் வேலைகள் தொடங்கப்பட உள்ளன. (12)

## தீவுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி தடை

(புங்குடுதீவு)
புங்குடுதீவுப் பகுதியில் 'தமிழீழ விடுதலைப் புலிகளினால் 'கசிப்பு உற்பத்தி' முற்றாகத் தடை செய்யப் பட்டுள்ளது. இதன் பிரகாரம் கசிப்பை உற்பத்தி செய்வோரும், அதனை விற்பனை செய்வோரும் உடனடியாக அவற்றை நிறுத்து மாறு, விடுதலைப் புலிகள்' சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

உயிர்க் கொல்லியான கசிப்பினால் பல தொல்லைகளை அனுபவித்து வந்த புங்குடுதீவு வாழ் மக்கள் இந் நடவடிக்கையைப் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

## புகையிரத இரும்பு, தகடுகள், ஆணிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)
புகையிரதப் பகுதிக்குச் சொந்தமான தகடுகள், ஆணி வகைகள், புகையிரதப் பெட்டிகள் இணைக்கும் தொடர்புகள் ஆகியனவற்றை புகையிர




## ஆப்கானிஸ்தானில் களையெடுப்பு

(காபுல்)
ஆப்கானிஸ்தானில் இம்மாத தொடக்கத்தில் நடைபெற்று வீழ்ச்சியடைந்த புரட்சியில் தொடர்பு கொண்டதாக கூறப்பட்ட 17 பேர் ஆளும் மக்கள் ஜனநாயக கட்சியில் இருந்து விலக்கப்பட்டனர்.

## மீண்டும் திறக்கப்பட்டது

(சாவகச்சேரி)
நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பெருங்குளம் பாரதி படிப்பகம் மீண்டும் திறக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

## பருத்தித்துறையில் மக்கள் கடை திறந்துவைக்கப்பட்டது

(பருத்தித்துறை)
"பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்கும்போதுதான் பாவனையாளர்கள் போதிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பணப்பாளர்களும் பணியாளர்களும் இணைந்து பாவனையாளர்களின் ஒத்துழைப்புடன் இயங்கும் போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு இலட்சியத்தில் வெற்றி பெற முடியும். பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு வகையான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பருத்தித்துறை மக்கள் சந்தையில் அமைக்கப்பட்ட மக்கள் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். சிவநாதன் குறிப்பிட்டார்:

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு.எஸ். காந்திதாசன் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. சிவநாதன் குறிப்பிட்டதாவது,

கூட்டுறவுத்துறை இன்று மக்களின வாழ்வுடன் பின்னிப் பிணைந்து மிகமுக்கியம் வாய்ந்த துறையாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்கள் மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு சிறந்த சேவையாற்ற வேண்டிய முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## லித்வேனியாவுக்கு காலக்கெடு விதிக்கவில்லை
### ஜனாதிபதி கொர்பச்சேவ் மறுப்பு

(மொஸ்கோ)
லித்வேனிய சுதந்திரம் பற்றி அவர்களின் முடிவைத் தெரிவிப்பதற்கு சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் காலக்கெடு விதித்திருப்பதாக செய்தித் தாபனங்களும், பத்திரிகைகளும் வெளியிட்ட செய்தியை ஜனாதிபதி மறுத்துள்ளார். சோவியத் யூனியனில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதான ஒரு தலைப்பட்சமான அறிவிப்பை லித்வேனியா விளக்கிக் கொள்வதற்கான இறுதி அறிவிப்பை தாம் வெளியிட்டு இருப்பதாக கூறப்படுவதை சோவியத் ஜனாதிபதி மறுத்துள்ளார்.

இதற்கு முன்னர் சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் பெற்றதாக ஒரு தலைப்பட்சமாக லித்வேனியா விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தமை தெரிந்ததே.

## கிராமோதயத்

## வாசலுக்கு வாசல் பஸ்கள் நிறுத்தக் கூடாது

குறிப்பிட்ட பஸ் தரிப்புகளில் அன்றி இடையில் வாசல்களுக்கு வாசல் பஸ் மறித்து

கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு மாடிக்கட்டிடம் நவீன வசதிகளுடன் அமைப்பதற்கான வரைபடம் தயாராகி விட்டது.

ஏப்பிரல் மாத முதல்வாரத்தில் அத்திவாரம் இடப்பட்டு கட்டுமான வேலைகள் தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிட வேலை ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபாவை பன்முகப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளது.

அமைக்கப்பட இருக்கும் முறைசாராக்கல்விவள நிலையக்கட்டிடம், நூலகம், முறைசாராக் கல்விப் பயிற்சிக் கூடம் விடுதி, அலுவலகம், தொழிற்கூடம், விற்பனைச்சாலை, வகுப்பறைகள், மகாநாட்டு மண்டபம், வாகன தரிப்பிடம் அமையப் போகும் இந்நவீன தொழிற் கூடம் யாழ். மாவட்டத்தின் முறைசாராக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் எடுத்த அயரா முயற்சியின் பயனாகவே அமைக்கப்படுகின்றது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு அருகாமையில் இதற்கான நிலம் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப துப்பரவாக்கல் வேலைகள் தொடங்கப்பட உள்ளன. (12)

...னால் 'சுசிப்பு உற்பத்தி' முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சுசிப்பை உற்பத்தி செய்வோரும், அதனை விற்பனை செய்வோரும் உடனடியாக அவற்றை நிறுத்து மாறு, விடுதலைப் புலிகள்' சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

உயிர்க் கொல்லியான சுசிப்பினால் பல தொல்லைகளை அனுபவித்து வந்த புங்குடுதீவு வாழ் மக்கள் இந் நடவடிக்கையைப் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

## புகையிரத இரும்பு, தகடுகள், ஆணிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

புகையிரதப் பகுதிக்குச் சொந்தமான தகடுகள், ஆணி வகைகள், புகையிரதப் பெட்டிகள் இணைக்கும் தொடர்புகள் ஆகியனவற்றை புகையிரதப் பாதையிலும், புகையிரதம் நிறுத்தப்படும் இடங்களிலிருந்து களவாடப்பட்டு, அவற்றை இரும்பு விலைக்கு விற்கப்படுவதால் புகையிரதச் சேவை பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதே வேளையில் களவாடப்படுகின்ற இரும்புகளை வாங்கி விற்கின்ற வியாபாரக் குழுக்களும் இயங்கிவருவதாகத் தெரிய வருகின்றது.

## அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு மாதக் கடன்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு ஆறுமாதச்சம்பளத்தை இடர் கடனாக வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்திட்டம் உடனடியாகச் செயற்படுத்தப்படுமாம்.

சுமார் அரை இலட்சம் அரசாங்க ஊழியர்கள் இந்த இடர் கடன முற்பணத்தைப் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் எனப் பொது நிர்வாக அமைச்சின் ராஜாங்க காரியதரிசி சி. எம். என். ஜூனெனட் தெரிவித்தார்,

இக் கடனுக்கான வட்டி 7:2 வீதமாகும். கடன், சம்பளத்தில் மாதாந்தம் 10./- மாதத் தவணை முறையில் கழிக்கப்படும்.

வீட்டு வாடகை நிலுவை, மரணவீட்டுச் செலவு, வீட்டிற்கு நெருப்பினால் ஏற்பட்ட சேதம் ஆகிய காரணங்களுக்காக அரசாங்க ஊழியர் இச் சம்பள முற்பணத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

அரசாங்க ஊழியர்களைத் தங்கியிருப்பவர்கள், அவர்கள் பெற்றோர், சகோதரர், சகோதரிகள் ஆகியோர் இடரைத் தீர்ப்பதற்கு அரசாங்க ஊழியர் இக்கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

## இரு பெண்கள், வியாபாரி கடத்தல்

## 3 லெப்டினன்ட், 6 படையினர் பொலிஸாரால் கைது!

இரத்தினக்கல் வியாபாரி ஒருவரும், இரு பெண்களும் கடத்தப்பட்டது தொடர்பாக மூன்று லெப்டினன்ட்கள் உட்பட ஆறு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறைப் பகுதியில் இச் சம்பவம் இடப்பெற்றது. கடத்தப்பட்ட பெண்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் சகோதரி என்றும், மற்றப்பெண் இராணுவ அதிகாரி ஒருவரின் மைத்துனி எனவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பால் விற்பனை நிலையங்களில் மக்கள் கியூ வரிசை!

யாழ்-நகரில் உள்ள சில பால் விற்பனை நிலையங்களில் ஒழுங்காக மக்களுக்கு பால் கிடைப்பதில்லை. அத்துடன் சில பால் விற்பனை நிலையங்கள் நேரத்துக்கு மூடப்படுகிறதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்-தபால் நிலையத்துக்கு அருகில் உள்ள பால்விற்பனை நிலையத்திற்கு அதிகாலை வரும் பால் பொதுமக்களுக்கு கிடைக்காமல் வேறு இடத்துக்கு போய்விடுகிறது.

அதாபின்னர் காலை 8-00 மணிவரையும் போத்தல்களுடன் பொதுமக்கள் கியூ வரிசையில் காவல் இருக்கின்றனர்.

இங்கே பால் முடிந்துவிட்டது, வர வேண்டும் என்ற பதிலே கிடைக்கிறது!

## 210லட்சம் ரூபா செலவில் வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி சுமார் 210 இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இவ்வீதி திருத்தப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த பருத்தித்துறை மருதங்கேணி வீதி தற்பொழுது பயங்கர குன்றுகளுடனும் குழிகளுடனும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வீதியில் அடிக்கடி பயங்கர விபத்துக்களும் ஏற்படுகின்றன. (25)

கூறினார்.

கிறது.

வேறு வகையான அபிவிருத்தி

# லித்வேனியாவுக்கு காலக்கெடு விதிக்கவில்லை

## ஜனாதிபதி கொர்பச்சேவ் மறுப்பு

(மொஸ்கோ)

லித்வேனிய சுதந்திரம் பற்றி அவர்களின் முடிவைத் தெரிவிப்பதற்கு சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் காலக்கெடு விதித்திருப்பதாக செய்தித் தாபனங்களும், பத்திரிகைகளும் வெளியிட்ட செய்தியை ஜனாதிபதி மறுத்துள்ளார். சோவியத் யூனியனில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதான ஒரு தலைப்பட்சமான அறிவிப்பை லித்வேனியா விளக்கிக் கொள்வதற்கான இறுதி அறிவிப்பை தாம் வெளியிட்டு இருப்பதாக கூறப்படுவதை சோவியத் ஜனாதிபதி மறுத்துள்ளார்.

இதற்கு முன்னர் சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் பெற்றதாக ஒரு தலைப்பட்சமாக லித்வேனியா விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தமை தெரிந்ததே.

## கிராமோதயத் தலைவராக சக்திவேல் தெரிவு

(கிளிநொச்சி)

முறிகண்டி கிராமோதய சபைத் தலைவராக திரு. பொ. சக்திவேல் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முறிகண்டிப் பகுதி கிராம சேவையாளர் திரு. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற தேர்தலிலேயே திரு. சக்திவேல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தேர்தலில் முறிகண்டியில் உள்ள சமய, சமூக கூட்டுறவு ஸ்தாபனங்களைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு திரு. சக்திவேலை மேற்படி பகுதியின் கிராமோதய சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

## ஆண்டு விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு திருவள்ளுவர் சேவாசங்கத்தினால் நடாத்தப்படும் 8வது ஆண்டுவிழாவும்' விளையாட்டுவிழாவும்' அடுத்த மாதம் 13ஆம். 14-ஆம் திகதிகளில் புங்குடுதீவு வீர புளியடி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

## மீண்டும் பயிற்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தென் இந்திய திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் தொழிற் பயிற்சிப் பாடசாலையில், மீண்டும், ஆங்கில தமிழ் தட்டச்சும், சுருக்கெழுத்தும், பயிற்சிப் பாடங்களாக மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது,

இதற்கான முயற்சிகளில் நிர்வாகி, அருட்திரு. ரி. எச். வசந்தகுமார் அவர்கள் ஈடுபட்டுள்ளார்.

## சென்ரல் - சென். ஜோன்ஸ்

## கிரிக்கெட் போட்டி ஆயத்தம்; நகரில் மாணவர் பவனி!

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு வருடங்களாக, இலங்கை - இந்திய இராணுவ நெருடிப்படிகளால் தடைப்பட்டிருந்த யாழ் மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி கிரிக்கெட் போட்டிகளுக்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

மாணவர்கள் தத்தமது கல்லூரிகளுக்கு ஆதரவு சேர்க்கும் முகமாக நகரில் கல்லூரி கோஷங்களை எழுப்பிய வண்ணம் வாகனங்களில் பவனி வருகின்றனர்.

சயிக்கிள் ஊர்வலங்களும், கல்லூரிக் கொடிகளும் நகரில் சாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது. பல வருடங்களின் பின் மாணவர்கள் இவ்வாறு களிப்புடன் உலாவுவதை மக்கள் ஆங்காங்கே வேடிக்கை பார்த்த வண்ணம் நிற்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## பாடசாலைகளை வளர்க்க பெற்றோர் பாடுபட வேண்டும்

(சித்தங்கேணி)

அச்ச உணர்வோடு பாடசாலை விழாக்களை நடத்திய காலம் போய் அமைதியான முறையில் பகிழ்ச்சியோடு விழாக்களை நடத்தும் காலம் உருவாகியிருக்கிறது இக்கால சூழ்நிலையை உணர்ந்து மாணவர்கள் அதிக அக்கறையுடன் உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

கடந்த காலங்களில் நாட்டு நிலைமையைச் சாதகமாக்கி சமூக நோக்கின்றி இருந்தவர்கள் இன்றைய அமைதியான சூழ்நிலையில் பாடசாலை அபிவிருத்தியில் தமது பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டும். ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் புதிய உத்வேகத்துடன் பாடசாலைகளை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

மாணவர்களுக்கு நூற்கல்வியும் விளையாட்டும் இருகண்கள் போன்றவை என்றார்.

## திருத்தப்பட்ட வீதிகளின் அருகில் கற்கள் மிஞ்சியுள்ளன

யாழ்பபாணப் பகுதியில் சில இடங்களில் தற்போது வீதித் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன.

ஆனால் இங்கு சரியான முறையில் தார், கற்கள் வீதிகளுக்கு போடப்படுவதில்லை. திருத்திய வீதிகளின் அருகில் பெருமளவு கற்கள் மிச்சமாக காணப்படுகின்றன.

இதே போல சில வீதிகளில் நண்பகல் வெய்யில் நேரம் தார் உருகி ஓடுகிறது. இதில் மக்கள் நடமாட முடியாதுள்ளது.

வேறு சில வீதிகள் திருத்தப்பட்ட சில நாட்களில் போடப்பட்ட கற்கள் வீதிக்கு யேலே வந்து விடுகின்றன.

தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. சிவநாதன் குறிப்பிட்டதாவது,

கூட்டுறவுத்துறை இன்று மக்களின வாழ்வுடன் பின்னிப் பிணைந்து மிகமுக்கியம் வாய்ந்த துறையாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்கள் மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு சிறந்த சேவையாற்ற வேண்டிய முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## வாசலுக்கு வாசல் பஸ்கள் நிறுத்தக் கூடாது

குறிப்பிட்ட பஸ் தரிப்புகளில் அன்றி இடையில் வாசல்களுக்கு வாசல் பஸ் மறித்து பிரயாணிகளை ஏற்றக் கூடாது. இக் கட்டளையை மீறும் பஸ் நடத்துனர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கோண்டாவில் பேரூந்துச் சாலையின் விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது. (12)

## விளையாட்டுப் போட்டி

(புங்குடுதீவு)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்படவிருக்கும் 'கரப்பந்தாட்டம்', 'எல்லே', உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இப்போட்டிகளை வேலணை விளையாட்டு அதிகாரி திரு, P. பொனுச்சாமி அவர்கள் நெறிப்படுத்துவார்.

27ஆம் திகதி நடைபெறவிருக்கும் கரப்பந்தாட்டப் போட்டி புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்திலும், 'எல்லேப' போட்டி வேலணை விளையாட்டு மைதானத்திலும், உதைபந்தாட்டப் போட்டி அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளதாக புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜா தெரிவித்தார்.

# கிராமங்கள் தோறும் முதலுதவிப்படை தேவை

(புங்குடுதீவு)

தமிழ்ப் பகுதிகளில் என்று சிவில் நிர்வாகம் சீர் குலைந்ததோ அன்று தொட்டு சென் ஜோன் அம்புலன்ஸ் படையினரின் சேவை கட்டாயமாக்கப்பட்டு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

எமது நாட்டில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இறப்பு வீதம் அதிகரிக்கப்பட்டமையாலும் எம் மக்கள் ஊனமாக்கப்பட்டமையினாலும் எமது சென் ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவுக்கு ஆதரவு பெருகியது. உறுப்பினர்கள் தாமாகவே வந்து பயிற்சி பெற்றனர். அதன் மூலம் எமது சேவை நாட்டின் பல பகுதிகளிலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சென் ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் புங்குடுதீவு பிரிவினால் அண்மையில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண சென் ஜோன் அம்புலன்ஸ் படை ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் செல்வி ம. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஆணையாளர் சுகந்தன் தொடர்ந்து பேசுகையில் 87 ஆம் ஆண்டுக்கும் 89ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் எமது அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வந்தமையும் எமது படைப்பிரிவின் சீருடை அணிவதற்கு கூட ஆபத்து வந்தமையையும் சுட்டிக் காட்டினார்.

ஆனாலும் நாட்டின் சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப எமது சேவை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வேலணை கோட்ட கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் உரையாற்றுகையில் கிராம புறங்களிலே இம் முதலுதவிப் படை இருக்க வேண்டியது மிக அவசியம் என்றும் தீவக மக்களின் நன்மை கருதிசேவை யாற்றி வரும் தீவுப்பகுதி சென்ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவை பாராட்ட வேண்டும் என்றும் உரையாற்றினார்.

முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களுக்கான 'சான்றிதழ்களை' படை ஆணையாளர் வழங்கினார். புங்குடுதீவ பகுதிக்கான மேற்படிபடைப்பிரிவின் அத்தியட்சகராக திருமதி. மரிய திரேசா வசந்தகுமார் நியமிக்கப்பட்டு அதற்கானபதக்கமும் அவருக்கு அணியப்பட்டது.

இப் படைப்பிரிவினால் வெளியிடப்பட்ட முதலுதவிக் கைநூல் எனும் நூல் வெளியீடும் நடைபெற்றது.

இறுதியில் செல்வி [illegible] கமலா நன்றியுரை தெரிவித்தார்.

றபர்சில், வீட்டுப் பெயர் பதித்தல், திறப்புக் கோர்வை, விலாசங்கள், பன்றிக்கூடச் சின்னங்கள், மெழுகு சீல், மோட்டார் சயிக்கிள் நம்பர்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

'மேவின்ஸ்'

91/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B/297)

கலைமகள் சனசமூக நிலையம் நடாத்தும்
விளையாட்டு விழா
காலம்:- 15 - 5 - 1990
நிலைய விளையாட்டு தவிர
15 மைல் மரதன் ஓட்டம்
25 மைல் சைக்கிள் ஓட்டம்

## சாம்பியாவில் ஒருகட்சி ஆட்சி தொடரும்

(லுசாக்கா)

சாம்பியா பதினேழு ஆண்டு கால ஒரு கட்சி ஆட்சி முறையை தொடர்ந்து நீடிக்கப்போகிறது. நேற்று லுசாக்காவில் முடிவடைந்த ஆளும் ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சியின் மூன்று நாள் கூட்டத்தில் இவ்விதம் முடிவு செய்யப்பட்டது.

## நியமனம் வழங்கும் வைபவம்

முல்லைத்தீவிலிருந்து பயிலுனர் ஆசிரியராக தெரிவு செய்யப்பட்ட 312 ஆசிரியர்ளுக்கும் தற்காலிக நியமனம் வழங்கும் வைபவம் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்றது.

பிரசம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மனோகரன் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை புதிய ஆசிரியர்களுக்கு வழங்கினார்.

இவ்விழா முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அதிபர் திரு. கே. தங்கராசா தலைமையில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பாளர் திரு. திவாகர், முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கைலாஸ், வன்னி பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. ஆர். சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு இதில் உரையாற்றினார்கள்.

வாழைச்சேனைக் கூட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன் உரை

# தமிழன் இன்று தலை நிமிர்ந்து வாழ்வதற்கு புலிகளின் தலைவர் பிரபாகரனே காரணம்

(மட்டக்களப்பு)

தமிழ்பேசும் மக்கள் பூரண சுதந்திரத்தை உணர்வு பூர்வமாக அனுபவிக்கும்வரை எமது விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கை விளக்கக் கூட்டம் வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதற்கு கோறளைப் பற்று பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. எஸ்.பி. தலைமை வகித்தார்.

தொடர்ந்து விசு உரையாற்றும்போது எமது போராளிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை திறம்படச் செயற்படுவதற்கு தலைவரின் உறுதிப்பாடுதான் முக்கிய காரணம் என்று கூறினார்.

மேலும் இன்று அரசுடன் நாம் பேசுகிறோம். இது ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும், ஐக்கியமாகவும் வாழ வழிசெய்வோம். மக்களும் அதனையே விரும்புகின்றார்கள். அதனை நாம் செய்வோம் என்றார்.

கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில் தமிழன் இதுவரை காலமும் இந்த நாட்டில் சிங்களப் பேரினவாதிகளால் ஆளப்பட்டு வந்தான். இதனால் ஒடுக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாக இருந்து வந்தான். இன்று மானம் மரியாதையுடன் தலை நிமிர்ந்து வாழுகிறான் இந்த நிலை தலைவர் பிரபாகரனாலேயே உருவானது என்றார்.

இதுவரை நடைபெற்ற போராட்டத்தில் 1400 விடுதலைப் புலிகள் களத்தில் மாண்டுள்ளனர். இதில் 27 பெண் புலிகளும் அடங்குவார்கள். இவர்கள் யாவரும் தமிழ் ஈழத்துக்காக, இனத்தின் விடுதலைக்காகச் செய்த தியாகங்களை தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

மக்கள் முன்னணியின் துணைச் செயலாளர் செல்வி சுந்தரி தமதுரையில் பெண்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட பெண்கள் விழிப்படைய வேண்டும் என்று கேட்டதுடன் விடுதலைப் போராட்டத்தில் மகளிர் படைப்பிரிவு ஆற்றிய பங்குகளையும் எடுத்து விளக்கினார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்குப் பொது அறிவு குறைவு

## உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கவலை.

(கிளிநொச்சி)

இம்மாவட்டத்தில் வாழுகின்ற இளைஞர், யுவதிகளுக்குப் பொது அறிவு மிகக் குறைவாகவே உள்ளது. அவர்களுடைய வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, பத்திரிகை போன்றவைகளை வாங்கக் கூடிய வசதி இங்கு வாழுகின்ற பலருக்கு இல்லாமையே அதற்குக் காரணமாகும்.

கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களை அமைத்து, பொது அறிவை வளர்க்கக்கூடிய இச்சாதனங்களை அங்கு வாங்கி, பொது மக்களின் பாவனைக்கு வைப்பதன் மூலம், இம்மக்களின் பொது அறிவினை வளர்க்க முடியும்.

கரைச்சி சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மு. குமாரதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

கரைச்சி சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. ப. வை. ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், உதவி ஆணையாளர். திரு. குமாரதாசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

அரசாங்கம் கிராமோதய சபைகளுக்கும், பிரதேச சபைகளுக்கும் உதவி செய்து வருகிறது. இச்சபைகள் சனசமூக நிலையங்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கின்றன. கிராமோதய, பிரதேச சபைகள் வழங்கும் ஒத்துழைப்பைப் பெற்று, சனசமூக நிலையங்கள் வளர்ச்சியடைய வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 864 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர, அங்கு வாழுகின்ற மக்கள் வசதியானவர்கள். ஒவ்வொரு வீடுகளிலும் புதினப் பத்திரிகைகள் வாசிக்கப்படுகின்றன. வானொலி கேட்கிறார்கள், தொலைக்காட்சி பார்க்கிறார்கள். இதனால் அங்கு வாழுகின்றவர்கள் அறிவு வளர்ச்சி கூடியவர்களாக இருக்கிறார்கள்,

யாழ். மாவட்டத்திலிருக்கின்ற சனசமூக நிலையங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 10 வீதமான சனசமூக நிலையங்கள் கூட இங்கு இல்லை. கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 20 சனசமூக நிலையங்களும், முழு மாவட்டத்திலும் 44 சனசமூக நிலையங்களுமே இருக்கின்றன என்றார்.

# சந்தைக் கட்டிடம் திருத்தப்பட வேண்டும்

(வேலணை)

வேலணை வங்களாவடியில் பலலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடதின் மேல் பகுதி கடந்த சில வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்து [illegible].

இவ்வாறு இருக்கும் கட்டிடத்தின் மேல்பகுதியிலுள்ள இரும்புக் கம்பிகள் அனேகமானவை கறள் பிடித்து உக்கக் கூடியதாகவும் இருப்பதால் உடனடியாக இக்கட்டிடத்தின் மேல் பகுதியைத் திருத்தி பொதுமக்களின் பாவனைக்குப் பயன்படுத்தினால் வேலணை பிரதேச சபைக்கு வருமானத்தை அதி[illegible] நன்மையடையக் கூடியதாக இருக்கும் என கூறப்படுகின்றது.

# ஈழத்து தமிழ்க் கவிதைகள் தனித்துவம் மிக்கவை

## சோவியத் கவிஞர் ஈழநாதத்துக்குப் பேட்டி

(கொழும்பு)

ஈழத்து எழுத்தாளர்களின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

'மஹாகவி பாரதியாரின் விடுதலை உணர்வைத் தூண்டும் பாடல்களே என்னை மிகவும் கவர்ந்தவை. இங்கு இரு

# சேவை மனப்பான்மையுடன் ஆசிரியர்கள் பணிபுரியவேண்டும்

சைவ உணவு நீங்கள் சாப்பிட்டுமகிழவும், நீங்கள் பார்சலாக வீட்டுக்கு கொண்டு போய் உண்ணவும் யாழ். நகரில் உங்களுக்குச் சேவை செய்ய காத்திருக்கும்,

வெள்ளி விலாஸ்

இல.- 288
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/307)

ஈழநாத மடலுக்கு எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

குளிர்சாதனப் பெட்டிகள் சம்பந்தமான பழுது பார்க்கும் வேலைகள், மின்சார உபகரணம் சம்பந்தமான பொருட்களை பழுது பார்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

நோர்த் கூல் எஞ்ஜினியர்ஸ்

இல. 250, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/305)

ஆதிகாலம் தொட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கை

இவ் வைபவத்தில், உதவி ஆணையாளர். திரு. குமாரதாசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

அரசாங்கம் கிராமோதய சபைகளுக்கும், பிரதேச சபை

இல்லை. கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 20 சனசமூக நிலையங்களும், முழு மாவட்டத்திலும் 44 சனசமூக நிலையங்களுமே இருக்கின்றன என்றார்.


கலைமகள் சனசமூக நிலையம் நடாத்தும்

**விளையாட்டு விழா**

காலம்:- 15 - 5 - 1990

நிலைய விளையாட்டு தவிர

15 மைல் மரதன் ஓட்டம்

25 மைல் சைக்கிள் ஓட்டம்

நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கழகங்கள் மற்றும் வீர வீராங்கனைகள் யாவரும் எதிர்வரும் 10- 5- 90 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதம விருந்தினர்கள்

திரு. சூசை அவர்கள் (விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்கள் முன்னணி பொறுப்பாளர்)

திரு. வை. வேலும்மயிலும் (உதவி அரசாங்க அதிபர்)

அன்பர்கள் அனைவரையும் வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

துரை சண்முகசுந்தரம்

(செயலாளர்)

கலைமகள் சனசமூக நிலையம்

வல்லை றோட்

கெருடாவில் தெற்கு,

தொண்டைமானாறு.

(B/316)



பல வருடகால சேவையில்

உன்னதமானதும், உயிர் ஊட்டும் சத்து நிரம்பியதும்

**தோலகட்டி நெல்லிரசம்**

வாங்கிப் பருகுங்கள்.

**தோலகட்டி ஆச்சிரமம்**

வசாவிளான்

குறிப்பு: போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள். மூடியைப்பார்த்து வாங்கவும். சிவப்பு மூடியினாலான வெள்ளை மார்க் பதியப்பட்டுள்ளது.

மறவாதீர்கள்

**தோலகட்டி product ஆச்சிரமம்**

(B-294)


# ஈழத்து தமிழ்க் கவிதைகள் தனித்துவம் மிக்கவை

## சோவியத் கவிஞர் ஈழநாதத்துக்குப் பேட்டி

(கொழும்பு)

ஈழத்து எழுத்தாளர்களின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஈழத்து கவிஞர்களின கவிதைகள் மூலம் போராட்டத்தின் நிலைமையை அறிந்து கொள்ள முடிந்தது. தமிழ் கவிஞர்களின் சவிதைத் தொகுப்பு ஒன்றை சோவியத் மொழிகளில் வெளியிடுவோம்.

இவ்வாறு சோவியத் கவிஞு நம், பாரதி பக்தருமான அனத்தொலி பார்பரா 'ஈழநாதம்' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்:

ஈழத்து தமிழ் கவிதைகள் தனித்துவம் மிக்கவை. மஹாகவி முதல் மலைநாட்டைச் சேர்ந்த குறிஞ்சி தென்னவன் வரை கவிதைப் படைப்புக்களை என்னுடன் எடுத்துச் செல்கிறேன். இலங்கை கவிஞர்களின் தொகுப்பு ஒன்றை வெளியிடும் முயற்சியில் உடனடியாக ஈடுபடுவேன்.

'மஹாகவி பாரதியாரின் விடுதலை உணர்வைத் தூண்டும் பாடல்களே என்னை மிகவும் கவர்ந்தவை. இங்கு இரு மொழி பேசும் மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்றார். (27)

வடக்கு கிழக்கு பகுதிகளில்

# மக்கள் வங்கி நகைகளை மீளளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதி மக்கள் வங்கிகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகளை வழங்குவதற்கு பிரதமரும் நீதியமைச்சருமான டி. பி விஜயதுங்கா நடவடிக்கை எடுத்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம். பியுமான ஜனாப் அஷ்ரப் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதமர் மக்கள் வங்கி உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் இந்த நகைகளுக்கான பணமும் வட்டியும் செலுத்தப்பட்டு பல மாதங்களாகியும் நகைகள் மீளளிக்கப் படவில்லை எனவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் இந்த நகைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேவை மனப்பான்மையுடன் ஆசிரியர்கள் பணிபுரியவேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

(மட்டக்களப்பு)

பணம் பெரிதல்ல. எமது பணிதான் பெரிது என்றகுறிக்கோள் இலட்சியம் கொண்டவர்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட பயிலுநர் ஆசிரியர், நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் தலைமை வகித்து உரையாற்றிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

கடந்த வார இறுதியில் புனித சிசிலியா மகளிர் வித்தியாலய மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

அவர் மேலும் உரையாற்றுகையில்: கல்வி ஜனநாயக முறையில் அணுகப்பட்டாலும் நகர பாடசாலை கிராமப்புற பாடசாலைகளிடையே இதுவரை சமத்துவம் உருவாகவில்லை. யதார்த்தமாக நோக்கினால் நிறைய வேறுபாடுகள் உண்டு. இதனைக் களைந்தெடுப்பது ஆசிரியர்கள் கடமையாகும்.

இம் மாவட்டத்தில் நகரப்புற பாடசாலைகளில்தான் ஆசிரியர்கள் கடமையாற்ற விரும்புகிறார்கள். இது கவலைக்குரியது.

ஆசிரியர்கள் மத்தியில் சேவை மனப்பான்மை இருத்தல் வேண்டும். சுயநலம் இருத்தல் கூடாது.

ஆசிரியர்களாகிய நீங்கள் சூழ்நிலையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட. வட-கிழக்கு மாகாணசிரேஷ்ட கல்விப்பணிப்பாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா நியமனக் கடிதங்களை வழங்கினார்.

# வேலணையில் நினைவு தினம்

(வேலணை)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தியாகி பரமேஸ்வரன் (முஸ்தப்பா) இன் இரண்டாவது நினைவு தினவிழா நெடுந்தீவு மத்தியில் சென்ற 14-ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

திரு. சங்கரப்பிள்ளை ஆசிரியர் தலைமையில் கொண்டாடப்பட்ட இவ் விழாவில் வீரமரணமடைந்த முஸ்தப்பாவின் தாயார் குத்து விளக்கேற்றி உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலியைச் செலுத்திக் கொண்டார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோ அஞ்சலி உரையாற்றும் போது:

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் வீரமரண மடைந்த 1354 விடுதலை புலிகளினதும் (26) இருபத்தி ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மக்களினது புதைகுழிகளையும், கல்லறைகளையும் தாண்டியே எமது லட்சிய பாதையினை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம் என்று தமது அஞ்சலியுரையில் கூறினார். நெடுந்தீவைச் சேர்ந்த திரு. மரியாம்பிள்ளை, திரு. அரியம் மாஸ்டர், செல்வி கௌசலாதேவி, திரு. அமிர்தராசா மேரி மண்டேசா, நெடுந்தீவு பொறுப்பாளர் திரு. சரத்பாபு உட்பட பலர் அஞ்சலியுரையாற்றினார்கள்.

# வரலாற்றுக் கழகம்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகம் புனரமைப்பு செய்யப்பட்ட பின்னர் தெரிவான நிர்வாகிகளின் விபரம் வருமாறு: போஷகராக பேராசிரியர் எஸ். பத்மநாதன், தலைவராக ஆர். கணேசலிங்கம், பெரும் பொருளாளராக எஸ். கிருஷ்ணராஜா, செயலாளராக பீ. மல்லிகா, பொருளாளராக பஹானாவும் பத்திராதிபராக யேசுநேசனும் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இக் கூட்டம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தொழில்நுட்ப மண்டபத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது.


வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கைதேர்ந்த வைத்தியர்.

டாக்டர் டோமினிக்

(சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

சென். பற்றிக்ஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/292)



24 மணி நேரத்திற்குள் உங்களுக்கு கீழ் கண்டவற்றை ஓடருக்கு செய்து கொடுப்பதற்கு, காத்திருக்கிறார்கள்.

நூடில்ஸ், புரியாணி, சாப்பாட்டுப் பார்சல்கள், கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, றால், நண்டு, பற்றிஸ், கட்லட், குளிர்பானங்கள்,

ஐஸ்கிறீம் வகைகள் நீங்கள் எடுத்துச் செல்வதற்கும் அங்கிருந்து உண்பதற்கும் சேவை செய்யக் காத்திருக்கின்றார்கள்.

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

69, 4ஆம்குறுக்குத்தெரு

சின்னக்கடை,

யாழ்ப்பாணம்.

(B/295)

### சிந்தனைக்கு

"தனக்கு மூக்குப் போனாலும்
எதிரிக்கு சகுனப் பிழையானால் போதும்"

- முதுமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 20 - 03 - 90

# ஆறாவது திருத்தமும் அஷ்ரப்பும்!

இலங்கையின் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் பிரேரணை எதையும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்குமென்றும்:

ஆறாவது திருத்தத்தை நீக்கினால் அது இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் என்றும்:

ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் தலைமையிலான இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

''நாற்பதாண்டு அரசியல்'' என்ற தலைப்பில் நேற்றைய எமது தலையங்கத்தில் இலங்கை அரசியலில் வகுப்புவாதம் எப்படித் தலைதூக்கியது என்பதை எடுத்துக் காட்டியிருந்தோம்.

வகுப்புவாத அரசியலின் விளைவை நாடு அனுபவித்ததையும் இதில் சிங்களத் தலைவர்கள் கற்றுக் கொண்ட படிப்பினை பற்றியும் நாம் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்களே இன்று திருந்தி சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்க வேண்டுமென்று கூறுகின்றனர்.

சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதில் போட்டி போட்டவர்கள் இன்று உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதில் போட்டி போடக்கூடிய அளவுக்கு மனம்மாறும் நிலையிலுள்ளனர்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கெனத் தனி மாகாண சபை வேண்டுமென முதலில் ஒரு கோரிக்கையை முன்வைத்தது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்தபோது காலி, களுத்துறை, பேருவளை, புத்தளம் போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களை அது மறந்துவிட்டது.

இந்திய இராணுவம் கிழக்கு மாகாணத்தில் அடாவடித்தனமாக நடந்துகொள்கிறது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் அறிக்கை விட்டார்.

சிறிது நாட்கள் கழித்து இந்திய இராணுவம் முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிறது என்று அறிக்கை விடுத்தார்.

# இலங்கையும் ஒரிஸாவும அன்றும் இன்றும்

சாம்ராட் அசோகனுடன் தொடர்புபடுத்திக் கலிங்க தேசத்துக்குப் புகழாரம் சூட்டப்படுகின்றது. கலிங்கத்தில் ஆதிவாசிகள் மலையடிவாரங்களிலும், காட்டுப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள் என்றாலும் கலிங்கம் இந்தியாவின் மற்ற மாகாணங்களுக்கெல்லாம் சளைத்ததல்ல. கலிங்கத்தில், சோழநாடு மகதம் போல்பலம் பொருந்திய அரசர்கள் ஆட்சிசெய்த காலமும் உண்டு. சாதவாகனர் ஆட்சிக் காலத்தில் போட்டியாக தக்கணத்தில் கலிங்கம் விளங்கியது. அசோகனுக்குப் பிறகு, அவனது வழித்தோன்றல்களிடமிருந்து விடுவித்துக் கொண்டு, வியத்தக்க ஆற்றலும், போரார்வமும் உடைய காரைவேலன் கலிங்கத்தை ஆட்சி செய்தான். பல்வேறு வடிவங்களைக் கொண்ட இந்திய சிற்பக் கலைக்கும் கலிங்கம் பெயர்போனது. புவனேஸ்வரத்தில் அமைந்துள்ள இலிங்கராசன் கோயில், வட இந்திய கோயிற் சிகரத்துக்கு எடுத்துக் காட்டாகவுள்ள பூரி ஜெகநாதன் கோயில், கோணாகரத்தில் கருங்கோடாவில் உள்ள சூரியதேவன் கோயில் ஆகியவற்றில் நுட்பமுறையில் செதுக்கப்பட்டு [illegible]ற்பங்களைக் காணலாம். கோணாசரத்தில் இருவர் கட்டித்தழுவும் நிலையில் அல்லது காதலர் மைத்துன நிலையிலுள்ள சிற்பம் உலகப் பிரசித்தி பெற்றது.

### இலங்கையும் கலிங்கமும்

கலிங்க தேசத்துக்கு உட்கல் என்ற பெயருமுண்டு. இன்று கலிங்கம் உட்பட்ட பிரதேசம் ஒரிஸா மாநிலம் என்று வழங்குகிறது.

இலங்கேஸ்வரனிடமிருந்து சீதையை மீட்ட இராமர், அவருடன் கலிங்க தேசம் வந்தடைந்தார். இதேவேளை இராட்சத மன்னனான இராவணனால் பலகாலம் சிறை வைக்கப்பட்ட சீதையை மீண்டும் அணைத்துக் கொள்ளும் சீலத்தைப் பற்றி ஒரிஸாவில் வாழ்ந்த தொல்குடியினர் நகைத்துள்ளனர். சீதை கோபமுற்று, வழங்கிய சாபத்தால், அவர்கள் காடுகளில் ஆடையில்லாமல் அலைகிறார்கள் என்று பரம்பரைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை - ஒரிஸா உறவு பற்றி போலிக் கற்பனைச் செய்திகள் தெரிவிக்கும் கதைகள் ஒருபுறமிருக்க, பௌத்த சமய இலக்கியமான ஜாதகக் கதைகளில் ஒரிஸா பற்றிப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

குடிவேட்கையும், கொலைகள் செய்தும் கொடுங்கோன்மை ஆட்சி செய்யத் தொடங்கிய அசோகனின் கலிங்கப்போர் பெரும் தாக்கத்தை அவனது வாழ்க்கையில் ஏற்படுத்தியது. இதன் பிறகு அசோகன் ஒரு புதிய கொள்கையைப் பின்பற்றலானான். போர்வெறியின் முரசொலி குறைந்து அறநெறியின் நாதம் தொடங்கியது. அசோகனின் அறிவுறுத்தற்படி தீசன் பௌத்த சமயத்தைத் தழுவினான் என்று மகாவமிசமும், வரலாற்றுக் குறிப்புகளும் கூறும்.

அசோகனின் மகனாகவோ அல்லது சகோதரனாகவோ கருதப்படும் மகேந்திரன் (பாளியில் மகிந்தர்) தூது வந்து தீசனைச் சமயமாற்றம் செய்தான். அசோகனுக்குத் தேவனம்பிய தீசன் என்ற பெயர் வழங்கப்படுவதுண்டு தீசனும் தேவனம்பிய தீசன் (கடவுளால் நம்பப்படுபவர்) என்று தன்னை அழைக்கும் படி பணிப்பித்தான்.

பொலநறுவைக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய இரு அரசர்களான நிசங்கமல்லனும் (1187-96), மாகனும் (1215-'36) கலிங்க தேச க்ஷத்திரிய வம்ச அரசர்களாகும்.

வரலாற்றுக் குறிப்புகளின் படி, புத்தரின் புனித தந்தத்தை கலிங்கத்திலிருந்து கொண்டு வந்த கப்பல், திருகோணமலையில் முத்தூரில் (மூதூரில்) நங்கூரமிட்டது.

### இலங்கையும் ஹர்ஷவர்தனனும்

ஹர்ஷன் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் கனூஜ் நகரத்தைத் தலைநகரமாக கொண்டு 41 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் இராவணனைப் போல் சிவபக்தன் என்று கல்ஹணனின் காஸ்மீர நூல் கூறுகிறது. இவன் பௌத்தருக்கும், பௌத்த பிக்குகளுக்கும் மிக மரியாதை செய்தான் என்று ஹர்ச் சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளது.

இந்த ஹர்வர்த்தனாவின் பெயரைத் தாங்கிய கப்பலும், திப்புசுல்த்தான் என்ற கப்பலும் வடக்கு கிழக்கு முன்னாள் ஆட்சியாளரை ஏற்றிச்செல்ல திருகோணமலைக்கு வந்தன. ஆனால் தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி புலம் பெயர்ந்த குழுக்களை ஏற்க மறுக்கவே, குழுக்கள் திசைமாறி ஒரிஸாவில் கோரக்பூர் மாவட்டத்தில் தஞ்சமடைந்தன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு ஒரு வழிப் பாதையல்ல. அது இரு வழிப் பாதை. முன்பு வங்காளத்தில் சிங்கூரில் அட்டகாசம் செய்த விஜயனும் அவனது கூட்டாளிகளும் கப்பல் மார்க்கமாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இப்போது காற்றுமாறி வீசுகிறது. இங்கிருந்து நாபாவும் அவரது கூட்டாளிகளும் ஒரிஸ்ஸாவுக்குச் சென்றுள்ளார்கள்.

அச்சுவேலிக் கூட்டத்தில் பேச்சு

# மாணவர்களின் கல்வியில் குந்தகமாக நடந்ததில்லை

(அச்சுவேலி)

கல்வி மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கும், சொந்த மண்ணின் வளங்களைப் பயன்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பானதாக இருக்க வேண்டும். அத்தகைய கல்வி முறைதான் நின்று நிலைக்கும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ஜானகி, அச்சுவேலி திரேசா மகளிர் கல்லூரி மாணவிகள் மத்தியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கூறினார்.

செல்வி ஜானகி தொடர்ந்து உரையாற்றும்போது, தமிழ் மாணவர்களின் கல்வியில் இன்று தனியார் கல்வி நிலையங்கள் கணிசமான அளவு இடத்தைப் பிடித்திருப்பது, தமிழ் மாணவர்களின் கல்விப் பாதையைத் திசைமாறிச் செல்ல வைத்துள்ளது.

பரீட்சைக்கு மட்டும் தயார் படுத்தி, பரீட்சையில் சித்தி அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு மாணவர்கள் வழிநடத்தப்படுவதால் உயர் கல்விக்கு தகுதிபெற்ற மாணவர்கள் பலர் உரிய அறிவு இல்லாமல் திணறும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி பாரதி உரையாற்றும் போது, எமது தலைவரின் அசையாத நம்பிக்கையும், மன உறுதியும் தான் பதினேழு வருடங்களாக எமது போராட்டத்தை வெற்றிப் பாதையில் செல்ல வைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் குந்தகமாக எப்போதும் நடந்ததில்லை. எதிர்காலத்தில் நடக்கவும் மாட்டார்கள்.

மாணவர்களை இயக்கத்துக்குச் சேர்ப்பதாகக் கூறுவது தவறு. விரும்பி வருபவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தவறுவோமேயானால், அவர்கள் தீயவர்களின் வழிநடத்தலுக்கு உள்ளாகி, தவறான பாதையில் சென்றுவிடுவார்கள். இது சமகாலத்தில் நடந்தது எல்லோருக்கும் தெரிந்ததே.

கல்வியில் ஆர்வம் உள்ளவர்களுக்கு நவீன விஞ்ஞான ரீதியிலான கல்வி வாய்ப்பு எமது இயக்கத்தில் வழங்கப் படுகின்றது அவர்களின் எதிர்காலம் ஒளியுள்ளதாக இருக்கும் பெற்றோர் கவலை கொள்ளத் தேவையில்லை எனக் கூறினார்.

## ஊர்சுற்றி

### எழுதுவது

'சுத்தமான தேன்' சுத்தமான நெய், சுத்தமான நல்லெண்ணெய் என்றெல்லாம் லேபல் ஒட்டிக் கடைகளில் காட்சியளிக்கும் போத்தல்களில் எத்தனை உண்மையில் சுத்தமானவை? எத்தனை போலி; எத்தனை கலப்படம்?

யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் எனது நண்பர் ஒருவர் வேலை பார்க்கிறார். அவரது அலுவலகம் மேல்மாடியிலுள்ளது. அவர் அடிக்கடி காணும் காட்சி இது.

எதிர் வீட்டிற்கு 'பை' ஒன்றுடன் வருவார். அந்த வீட்டின் பின் புறத்தில் அவருடைய தொழிற்சாலைக்கென ஓரிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு அடுப்பு. அதன் மேல் ஒரு தகரப்பீப்பா. வாளியில் கொஞ்சம் தண்ணீர். சிறியதொரு பையில் தேங்காய்ப்பூப் போன்றதொரு பொருள். மற்றும் சில சில்லறைப் பொருட்கள். இருபது இருபத்தைந்து வெற்றுப் போத்தல்கள். பையில் கொண்டு வந்த பொருட்களை தகரப் பீப்பாவுக்குள் போடுவார். சிறிது தண்ணீரையும் அதற்குள் ஊற்றுவார். அடுப்பை மூட்டுவார். தகரப்பீப்பாவுக்குள் கொட்டிய பொருட்கள் கறுப்புச் சீனி பாணியாகக் காய்சியதும் அதை எடுத்துப்

# இளம் விதவையின் கண்ணீர்

ஆசிரியர்
'' ஈழநாதம் ''

வுடன் எனது சுயமுயற்சியால்

# சார்ள்ஸின் கவிதை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

உரையில், எவர் என்ன கருத்

இந்திய இராணுவம் கிழக்கு மாகாணத்தில் அடாவடித்தனமாக நடந்துகொள்கிறது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் அறிக்கை விட்டார்.

சிறிது நாட்கள் கழித்து இந்திய இராணுவம் முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிறது என்று அறிக்கை விடுத்தார்.

முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் உரிமைகளைப் பெறமுடியும் என்று ஒருதடவை கூறுவார் ஜனாப் அஷ்ரப்.

பின் சில தினங்கள் கழித்து முஸ்லிம்கள் ஐக்கியமாக இருந்தாலே அவர்கள் உரிமையுடன் வாழ முடியும் என்று சொல்வார்.

இப்படி ஒன்றுக்குப்பின் முரணாகக் கருத்து வெளியிடுவதும் அறிக்கை வெளியிடுவதும் அவருக்குப் பழகிப்போன விஷயம்.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம்தான் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தையே சிலகாலம் இல்லாமல் செய்தது.

இந்தச்சமயத்திலேயே ஆறாவது திருத்தத்தை நீக்கிவிடலாமா என்ற கேள்வி சிங்களத் தலைவர்கள் மத்தியில் எழுந்தது.

ஆறாவது திருத்தம் அமுலிலிருந்தாலும்கூட அதைச் செயல்படுத்த முடியாமலே இருந்து வருகிறது.

தனிநாட்டுக் கோரிக்கையையோ தமிழீழக் கோரிக்கையையோ தடுத்து நிறுத்த முடிந்ததா?

இது தவிர சட்டத்தினால் மட்டும் தேசிய ஒருமைப்பாட்டையும் தேச விசுவாசத்தையும் ஏற்படுத்த முடியாதென்பதும் தெளிவாகி விட்டது.

இந்நிலையில் ஆறாவது திருத்தத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய சிங்களத் தலைவர்களே அதனால் பயனில்லை என்பதைத் தெரிந்து உணர்ந்து நீக்க முற்படும்போது பாவம் அஷ்ரப் 'நாடு பிளவுபட்டு விடும்'' என்று கண்ணீர் வடிக்கிறார்.

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கினால் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் இயக்கம் வடக்கிலும் கிழக்கிலும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும். இதில் இந்த முன்னணியின் வேட்பாளர்களே தெரிவு செய்யப்படுவார்கள்.

இதன்பின் ஜனாப் அஷ்ரப்பிற்கோ முஸ்லிம் காங்கிரசுக்கோ அரசியலில் இடமில்லாமல் போய்விடும்.

இதுதான் அஷ்ரப்பிற்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் திடீர்த் தேச பக்தி ஏற்படுவதற்கு முக்கிய காரணம்.

தங்கள் சுயநலத்துக்காக தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்தை சீர்குலைக்க முற்படுபவர்கள் மீது முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

## மக்கள் மடல்

# இளம் விதவையின் கண்ணீர்

ஆசிரியர்
'' ஈழநாதம் ''

நானும் ஓர் இளம் விதவை. 7 வயதில் ஒரே பெண்குழந்தை பாடசாலை செல்கிறார். நான் யாழ்ப்பாணத்தவளல்ல. சிறு வயதில் தாயை, தம்பியை இழந்து தனி ஒருத்தியாக அனாதையாக ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டேன். தந்தையும் காலமாக யாழ்ப்பாணத்தில் படித்து வளர்ப்புத்தந்தையின் உதவியால் படித்த ஒரு இளைஞனை மணந்து கணவன் ஒரு உத்தியோகமும் பெற்று ஒரு குழந்தையையும் பெற்று 1 வயதாக முன்னரே 1983 இல் எம்மைப் பிரிந்து உத்தியோகத்தை திறந்து வெளிநாட்டுக்கு ஓட வேண்டிய சட்டம் ஏற்பட்டது. இரண்டு வருடம் சுவிஸ் நாட்டில் உழைத்து பணத்தை சேமித்து நண்பனிடம் கொடுத்து வைத்து 1985 யூலை 1 தேதியில் எழுதிய கடிதத்தில் என்னையும் பிள்ளையையும் இந்தியாவுக்கு எனது வளர்ப்பு தந்தையுடன் வரும்படி குறிப்பிட்டிருந்தார். நாங்கள் ஆயத்தங்கள் செய்தோம். 13-7-85 வந்த தந்தி செய்தியில் எனது கணவர் திடீரென இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. நான் விதவையானேன். நண்பர்கள் பணத்தையும், உடமைகளையும் அபகரிக்க பிரியாவிடை விருந்து வைத்து மர்மமான முறையில் போதைவஸ்தை பருகச் செய்து எனது கணவனை சாகடித்து விட்டதாக அறிந்தேன்.

தற்போது எனக்கு அரசாங்க மாதாந்த உதவிப் பணம் 120/- ரூபாவும் உணவு முத்திரை 80/- ரூபாவும் கிடைக்கிறது. எனக்கு காணி, பூமி, வீடுவளவு எதுவும் இல்லை. மாதம் 200/- ரூபாவுடன் எனது சுயமுயற்சியால் கிடைக்கும் சொற்ப பணத்தையும் கொண்டு கஷ்ட சீவனம் நடாத்துகிறேன்.

என்னை வளர்த்து ஆளாக்கியவர்களது வீட்டில் ஒரு சிறு பகுதியில் வசிக்கிறேன். மீளக் குடியமர்த்தல் நிவாரண விண்ணப்பம் 23-8-88 இல் கிராமசேவையாளரிடம் சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக வந்தவர்கள் எனக்கு வீடும் இல்லை வாசலுமில்லை என்று எனது விண்ணப்பத்தை சிபார்சு செய்யவில்லை. செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்க மாதாந்த உதவி பெறுபவர்களுக்கு உணவு உடை பார்சல் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வழங்குவதாக உப அஞ்சலக அதிபர் கூறியபடி கிராமசேவையாளரின் அலுவலகம் சென்று விசாரித்தபோது வயது போனவர்களுக்குத்தான் துண்டு தரமுடியும் என்று கிராம சேவையாளரின் உதவியாளர்கள் திருப்பி விட்டனர்.

யாழ்ப்பாணம் செஞ்சிலுவை சங்கத்துக்கு இது பற்றி அறிவித்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. பாடசாலை செல்லும் விதவைகளின் குழந்தைகளுக்கு சீர் உடைக்கு இலவசமாக துணி கிடைக்குமென செய்தி அறிந்து விண்ணப்பித்தேன். பதில் இல்லை இப்படியே தொடர்ந்தும் புனர்வாழ்வு நிலையங்களுடன் எனது அவல நிலை பற்றியும். உதவி கோரியும் எழுதிவருகிறேன். இதுவரை உருப்படியானஒரு விதஉதவியும்கிடைக்கவில்லை. ஜனசக்தி திட்டம் கூட எமது வலி - தெற்கு உ. அ. அதிபர் பிரிவுக்கு கடைசிக் சட்டமாகதான் வழங்கப்பட இருக்கிறது.

அரசின் புனர்வாழ்வு பகுதி புனர்வாழ்வு நிறுவனங்கள் என்போன்ற அபலைகளுக்கு உதவி வாழ வைக்குமா?

இங்ஙனம்
இளம் விதவை
மோ. இந்திராணி

ளார்கள்.

தவறான பாதையில் சென்று

# சார்ள்ஸின் கவிதை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

இன்றைய இளங் கவிஞர்களின் கவனங்கள், சமூகத்தைச் சென்றடைகின்றன இளம் சமுதாயம் ஏற்படுத்தியகலைமாற்றத்தால் அழகான கலைகள் இங்கு உருவாகியிருக்கின்றன. உருவாகி வருகின்றன.

இவ்வாறு சார்ள்ஸின் கவிதை நூல் ள் அறிமுக விழாவின் போது எழுத்தாளர்திரு. செம்பியன் செல்வன் தெரிவித்தார்.

நாவலர்மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து பேசும் போது:

இன்றைய உரைநடை இலக்கியத்திற்கும் கவிதைகளுக்குமிடையே ஒற்றுமை ஏற்பட்டு வருகிறது.

இளம் பெண்கள்,இளைஞர்கள் ஏராளமான கவிதைகள் படைக்கின்றனர். இது எம்மை சந்தோஷப்பட வைக்கிறது என்றார்.

கவிஞர் முருகையன் பேசும் போது.இந்த நூலாசிரியர் ஊக்கத்துடன் நிறைய எழுத வேண்டும். இவர் வளருவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதுஎன்று குறிப்பிட்டார்.

யாழ்.உள்ளூராட்சி ஆணையாளர் திரு.எஸ்.டிவகலாலா இவ்விழாவிற்கு த்தலைமை வகித்துப் பேசும் போது,

போராட்ட காலத்தில் எழுந்த கவிதைகள், எமது பிரச்சினைகளை படம்பிடித்துக்காட்டுகின்றன. இலக்கிய வடிவங்களில்,கவிதையில், பிரச்சினைகளை முதன்மைப் படுத்த இலகுவாக முடிகிறது என்று தெரிவித்தார்.

கவிஞர் திரு.சோ. பத்மநாதன் பேசும் போது,

தான் பெறுகிற அனுபவங்களை எல்லாம் எல்லோராலும் வெளிப்படுத்தமுடியாது. கவிஞன் தன் அனுபவங்களை சுலபமாக வெளிப்படுத்தி விடுகிறான் என்றார்.

வவுனியா - திலீபன் தமது உரையில், எவர் என்ன கருத்தைச் சொன்னாலும், எமது இளங்கவிஞர்கள் சொர்க்கத்தைப் பற்றிப் புலம்பிக்கொண்டிருக்காமல், எமது மண்ணின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்என்பது உண்மை என்றார்.

திரு.விவேக் (முரசொலி,) நிகழ்த்திய உரையில், இக்கவிஞர் இளம்வயதில் பல நூல்களைப் படைத்து சாதனை புரிந்துள்ளார் சமகாலப் பிரச்சினைகளை கவிதைகளில் சொல்லி இருக்கின்றார் என்றார். மு. புஸ்பராஜன் பேசுகையில் புதுக்கவிதையில் மனதில் தோன்றிய கருத்துகள் அப்படியே சொல்லப் படுகின்றன என்பதில்எனக்குச் சம்மதமில்லை. கவித்துவத்துடன் தான் புதுக்கவிதைகள் புனையப் படுகின்றன என்றார்.

கப்பன் கழகத் தலைவர் திரு. ஜெயராஜ் பேசும் போது, 'கவிதையென்று ஒன்றுதான் உண்டு. எதுகவித்துவத்துடன் புனையப்பட்டிருக்கிறதோ அதுதான் கவிதைபுதுக்கவிதை மரபுக்கவிதை எனபதெல்லாம் காலத்திற்கேற்றமாதிரிசொல்லப்படும் வடிவங்களாகும்.

கவிதையை எவராலும் உணர்த்த முடியாது. உணரத்தான் முடியும் என்றார். (தி

## வந்தாறுமூலையில் மகாலக்ஷ்மி பூசை

வந்தாறுமூலையில் கோவில் கொண்டு இருக்கும் ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் கடந்த 11.3.1990 (ஞாயிற்றுக் கிழமை) ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமகாலக்ஷ்மிக்கு விசேட தீபபூசை நடைபெற்றது.

அத்தோடு மகாயாகம், அபிசேக ஆராதனைகள் என்பனவும் நடைபெற்றது. பல நூற்றுக்கு மேற்பட்ட இளம் பெண்கள் குத்து விளக்குகள் வைத்து தீப பூசை புரிந்து வழிபாடு நடைபெற்றது.

போடுவார். சிறிது தண்ணீரையும் அதற்குள் ஊற்றுவார். அடுப்பை மூட்டுவார். தகரப்பீப்பாவுக்குள் கொட்டிய பொருட்கள் கறுப்புச் சீனி பாணியாகக் காய்ச்சியதும் அதை எடுத்துப் போத்தல்களில் விடுவார். சிறிது நேரம் கழித்து பாணியின் மேல் தேங்காய்ப்பூப் போன்ற பொருளைச் சிறிது தூவுவார். மேல் பாகம் நுரைத்தபடியிருக்கும். மூடிகளை எடுத்து போத்தல்களை அடைப்பார். போத்தல்களின்மேல் பாகத்தில் லேபல்களை ஒட்டுவார்.

'சுத்தமான தேன்' தேன் போத்தல்களுடன் அவர் கடைகளுக்குக் கொடுப்பதற்குப் புறப்பட்டு விடுவார்!

நல்லெண்ணெய்யுடன் செக்கில் ஆட்டும் போதே குக்ஸ் றோய் என்ற தேங்காய் எண்ணெய் கலப்படமாகிறதென்றும் இந்த சுத்தமானதேன் கதையை நண்பர் சொன்னபோது அருகே நின்றவர் கூறினார்.

''கலப்படம் கலப்படம் எங்கும் எதிலும் கலப்படம் இதை எடுத்துச் சொன்னாலே புலப்படும்''

என்ற சினிமாப் பாடல் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

''கலப்படம் இருக்கட்டும் 'சுத்தமான தேன்' போத்தலில் ஒரு துளி தேன் கூடக் கிடையாது அசல் போலி!

உணவுப் பொருள் போலித் தயாரிப்பாளர்களையும் கலப்படம் செய்பவர்களையும் கண்டுபிடித்துப் பகிரங்கமாகக் கசையடி கொடுக்கும் நாள் வந்நாளோ?

ஈழநாதம்

# கடந்த வருடத்தில் மட்டும் ஐம்பது பத்திரிகையாளர் கொலை

(நியூயோர்க்)

1989 ஆம் ஆண்டில் சுமார் 50 பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டுள்ளார்களாம்.

அநேகமான பத்திரிகை நிருபர்கள் தென் அமெரிக்காவில் கொலை செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகையாளர் பாதுகாப்புக் குழு வெள்ளியன்று நியூயோர்க்கில் அறிவித்துள்ளது.

எல் - சல்வடோரில் நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தில் 24 பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். போதைவஸ்து விற்கும் பெரும் புள்ளிகளுக்கும், அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட வன்செயல்களின் போது கொலம்பியாவில் மேலும்பத்திரிகையாளர் கொல்லப்பட்டனர்.

மரணத்தின் மூலம் தணிக்கை செய்யும் வழக்கம் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரத்தை செயலிழக்கச் செய்து வருகிறது என்று பத்திரிகையாளர் பாதுகாப்புக் குழுவின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிக்கப் போகும் நாடுகளில், அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் செயல் இப்போது இரட்டித்துள்ளது என்றும், இதுவரை 55 பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்றும்; இவர்களில் 15 பேர் சீனாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்களாம்.

90 நாடுகளில் மொத்தம் 1000 பத்திரிகைச் சுதந்திரம் மீறல் சம்பவங்களைத் தாம் பதிவு செய்துள்ளதாக குழு மேலும் தெரிவித்துள்ளது.

## பாடசாலையில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுவதில்லை

### காங்கேசன்துறை கொந்தணி அதிபர் பேச்சு

(காங்கேசன்துறை)

மாணவர்களின் உளவளர்ச்சி எவ்வளவு முக்கியமோ உடல் வளர்ச்சியும் அவ்வளவு முக்கியமே. உளவளர்ச்சிக்கு நூற்கல்வி மட்டும் போதுமானதாகாது உளவளர்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாதது. இதனால் மாணவர்கள் புத்தகத்துடன் வகுப்பறைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் நெட்டுருச் செய்யும் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருக்காது விளையாட்டு மைதானத்தில் கற்கவேண்டிய பல பாடங்களைக் கற்பதற்கு முன்னுரிமை கட்டாயமாக்கப்பட்டேனும் வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை இன்று வந்துவிட்டது.

இவ்வாறு காங்கேசன்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வலுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறைக்கொத்தணி அதிபரும், நடேஸ்வராக்கல்லூரி அதிபருமான திரு. க. இராசதுரை தெரிவித்தார்.

அதிபர் திரு, அ. அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் உரையாற்றிய கொத்தணி அதிபர் மாணவர்களுக்கு இன்று கல்வி ஒரு பாரமாகிவிட்டது அது சரியானமுறை முறையில் நடைபெறாது வெறுமனே போட்டிப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்யும் ஒரு பயிற்சிக்களமாகவே கல்வி நிறுவனங்கள் மாறிவிட்டன. தனியார் கல்வி நிறுவனங்களில் அதிகமானவை இலாப நோக்கில் செயல்படுவதற்காக பல்வேறு வகைக் கவர்ச்சிகர உத்திகளைப் பயன்படுத்தி தம்பக்கம் மாணவர்களை இழுக்க பாடசாலைகளின் பலவீனமும் அதற்கு வழிவிட்டுக் கொடுக்கின்றது.

பாடசாலை ஆசிரியர்களில் அதிகமானோர் தனியார் கல்லூரிகளில் காட்டும் கவர்ச்சியும், அக்கறையும் பாடசாலைகளில் காட்டாமையினால் இந்நிலமை ஏற்படுகின்றது. இதனால் மாணவன் காலையில் இருந்து படுக்கைக்குச் செல்லும் வரை எவ்வித உளஓய்வுமின்றி, உடற்பயிற்சிச் செயற்பாடுமின்றி, சுயசிந்த சிந்தனைக்கு இடமின்றி அலையும் அவலநிலையினால் மாணவனின் எதிர்காலம் சூனியமாகும் சூழ்நிலை உருவாகுகின்றது.

## கண்காட்சி

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலய முறைசாரா கல்விப் பிரிவில் கல்வி பயின்ற மாணவிகளின் உடைதயாரிப்பு கண்காட்சி கடந்த 16-03-90-இல் வித்தியாலய அதிபர் திரு. வி. கே. பரஞ்சோதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முறைசாரக் கல்வி அதிகாரி திரு. தங்கராசா அவர்களும் கலந்து கொண்டார். கண்காட்சியை பெரும் திரளான மக்கள் கண்டு களித்தனர்.

விடுதலைப் புலிகள்

## இலட்சியத்தில் இருந்து இறுதிவரை மாறப்போவதில்லை

''சென்ற பல வருடங்கள் தம் உயிர் உடமைகள் இழந்து செல்லொண்ணா கவலைகளை எல்லாம் பெற்ற தமிழ் மக்கள் நிரந்தர அமைதிக்கு தம் பாதுகாப்புக்கு எண்ணிய இலட்சிய வீரர்களே விடுதலைப் புலிகள் இவர்களின் வீரவரலாறும் விடுதலை வேட்கையும் உலக நாடுகளில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்களின் இலட்சியவேட்கையினாலேயே இலங்கையரசு சகல உறுதிகளையும் அளித்து 6வது சரத்தை நீக்குவதாக வாக்குறுதியளித்தே பேச்சுவார்த்தைக்கு தாமாக முன்வந்து அழைத்தது. நாம் இதிலிருந்து சற்றேனும் விலகப் போவதில்லை. தேர்தல் எமக்குப்பெரிதல்ல மக்களின் பூரண பாதுகாப்புச்சுய ஆதிக்கமுமே எம் இலட்சியம்'

மேற்கண்டவாறு வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய தீவக விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு. நரேஸ் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கு முன்னாள் வேலணை இணக்கசபைத் தலைவரும் கிராம அங்கத்தவருமான திரு. நா. வீரசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது கருத்தரங்கில் பலதரப்பட்ட வினாக்களுக்கும் சளைக்காது பலமணி நேரம் திரு. நரேஸ் அவர்கள் பதிலளித்து சபையின்பாராட்டுக்குள்ளானார். கருத்தரங்கில் ஆசிரியர் சோமசுந்தரம் பொ. அருணகிரிநாதன் மற்றும் ப. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தம் கருத்துரைகளை வழங்கினார்.

## புதுக்குடியிருப்பில் சிற்றூரவைக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில்சிவன்நகர் கிராமசேவையாளர் பிரிவில் நேற்று மாலை 4 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம் சிற்றூரவைத் தலைவர் திரு. ந. இரத்தினசிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றன இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு கைலாஸ் அவர்களும் புதுக்குடியிருப்பு பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு வே, குணம் அவர்களும் கலந்து கொண்டனர்.

## இந்திய இராணுவத்தால் மேலும் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதம் 26ம் திகதி நடை பெற்ற இந்தியராணுவ தாக்குதல்களின் போது நெல்லிப்பளையில் காயமடைந்த த. பத்மநாதன் என்பவர் ஆபத்தான நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு பின் யாழ். வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யபட்ட நிலையில் நேற்று காலமானார்.

(லோ)

## சின்னக்கடைச் சூழலின் வீதிகளில் எலும்புகள் நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக்கடைப்பகுதியை அண்டியுள்ள வீதிகளில் எலும்புகள் காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகிறது.

இங்குள்ள இறைச்சிக் கடைகளில் இருந்து வெளியே வீசப்படும் இந்த எலும்புகளும், இறைச்சித்துண்டுகளும் கட்டாக்காலி நாய்களால் இழுத்துச் செல்லப்பட்டு வீதிகளில் விடப்படுகின்றன.

நான்காம் குறுக்குத்தெரு, பாங்ஷால் வீதி, பிரதானவீதி ஆறாம் குறுக்குத்தெரு போன்ற பகுதிகளில் இவை காணப்படுகின்றன.

இதேசமயம் சில வீடுகளுக்குள்ளும் காகங்கள் இவற்றைக் கொண்டு சென்று போட்டுவிடுகின்றன.

சின்னக்கடையில் இருந்து இந்தப் பொருட்கள் வெளி வருவனவற்றை யாழ் மாநகர சுகாதாரப் பகுதியினர் தடுக்க வேண்டும் எனவும் மக்கள்கேட்டுள்ளனர்.

## ஆசிரியர் நினைவாக கலையரங்கு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், சமூகத்தொண்டருமான அகாலமரணமடைந்த திரு கருணாநந்தசிவம் அவர்களின் பெயரில் நடேஸ்வராக் கல்லூரியில் ''கலையரங்கு'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்

## விண்ணப்ப காலம் நீடிப்பு

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான விண்ணப்பங்களின் முடிவுத்திகதி இம்மாதம் 30ஆம் திகதி என கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது

முன்னர் 26ஆம் திகதி முடிதிகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என ஜனாதி

## வடக்கு கிழக்கு----

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

யுத்த நிறுத்தத்தையும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையும் இந்திய அரசு நடத்த வேண்டுமென்று கோரி 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் தேதி அன்னை பூபதி கணபதிப்பிள்ளை சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். 1988 ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் பத்தொன்பதாம் தேதி அவர் தியாக மரணமடைந்தார்.

நேற்று ஆரம்பமான அன்னை பூபதி நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் அடுத்த மாதம் 19 ஆந் தேதி வரையான ஒரு மாதகாலத்துக்குத் தொடர்ந்து நடைபெறும். இந்நிகழ்ச்சியில் நேற்று முதல் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த இருவர் சுழற்சியாக அடையாள உண்ணா விரதமிருந்து வருவதொன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முதல் நாள் நிகழ்ச்சியில் திருமதி பிரான்சிஸ் கண்ணகையும் காலஞ்சென்ற போராளிதாசனின் அன்னை திருமதி கொன்ரன்ரைன் நடராஜாவும் உண்ணா நோன்பிருந்தனர். (37)

## யாழ் நகரில்---

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

தையும் எடுத்துக் காட்டுகின்றது. அன்னையின் தியாகம் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது உலகிலே வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களின் விடிவுக்கும் வழி வகுத்தது'' என அதிபர் க. சிற்றம்பலம் நேற்று இரவு கன்னாதிட்டி காளி கோயிலின் முன்றலில் நடைபெற்ற அறுபது வயது அம்மையாருக்குத் தோன்றிய உணர்வுகள் எங்கள் எல்லோருக்கும் ஏற்படவேண்டும் என்றார். இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணப் பிரதேச விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் திரு. பொன்னன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் திரு சத்தியசீலன், செல்வி மீரா ஆகியோருட்பட பலர் உரை

## கோப்பாயில் மீண்டும் கசிப்பு

கோப்பாய் பகுதியில் சில இடங்களில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்து வருவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மாலையானதும் இங்கு மக்கள் நடமாட முடியாதவாறு சத்தங்களும், சண்டைகளும் இடம் பெறுவதாகவும் இவர்கள் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

## பூநகரியில் நெல் கொள்வனவு!

(பூநகரி)

பூநகரி விவசாயிகளிடமிருந்து ஒரு மூடை பச்சைப் பெருமாள் நெல்லை 525 ரூபாவாக கொள்வனவு செய்து அதற்கான பணத்தினை புரட்டாதி மாத முதல்வாரத்தில் 650 ரூபாவாக விவசாயிகளுக்கு வழக்கப்படுமென்றும் பூநகரி ப நோ. கூ. சங்கம் பிரசுரம் மூலம் மக்களுக்கு

## நிவாரணம்

நான்காம் குறுக்குத்தெரு, பாங்ஷால் வீதி, பிரதானவீதி ஆறாம் குறுக்குத்தெரு போன்ற பகுதிகளில் இவை காணப்படுகின்றன.

இதேசமயம் சில வீடுகளுக்குள்ளும் காகங்கள் இவற்றைக் கொண்டு சென்று போ

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விவசாயச் செய்கையாலும், சென்ற காலங்களில் பொம்பர், ஹெலித்தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணக் கொடுபனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் புகார்களைத் தெரிவித்துள்ளார்கள்.

## அஞ்சலிக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

லெப்டினன்ட் துர்க்காவின் இரண்டாவது ஆண்டு நினைவு தினக்கூட்டத்தை புதுக்குடியிருப்பில் 1990-03-22 அன்று மாலை 3மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளீர் பிரிவால் நடத்தத் தீர்மானிக்கப்பட்டமையால் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள சகல மக்களையும் கலந்து கொள்ளுமாறு அப்பகுதி விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## காங்கேசன்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் செய்தனர். பட்டாசுகளை வெடிக்கவைத்து, புலிக்கொடியைத் தாங்கியவாறு 'புலிகள் வாழ்க' என்ற கோஷத்துடன் ஆர்ப்பரித்தனர்.

காங்கேசன்துறையில் உள்ள கல்லூரி மாணவர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கல்லூரி முகப்பில் புலிக்கொடி ஏற்றிக் கொண்டாடினர்.

கல்லூரி வீதி, மாவிட்டபுரம் சந்தி, காங்கேசன்துறை, பலாலிச் சந்திகளில் புலிக்கொடிகள் ஏற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (41)

## கலையரங்கு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், சமூகத்தொண்டருமான அகாலமரணமடைந்த திரு கருணாநந்தசிவம் அவர்களின் பெயரில் நடேஸ்வராக் கல்லூரியில் ''கலையரங்கு'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் கருணாநந்தசிவம் அவர்களின் முயற்சியால் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மண்டபத்தினைப் புனரமைத்து இப்பெயர் சூட்டப்படவுள்ளதாகக் கல்லூரி அபிவிருத்திச் சபையால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. (41)

## போப்பரை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரசரின் பிரதிநிதி இங்கிருந்த பதற்றநிலைமையால் வரமுடியவில்லை.

கொழும்பு, பதுளை, மட்டக்களப்பு போன்ற மறைமாவட்டங்களுக்கு முன்னர் விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர் யாழ்.வருவது இதுதான் முதல்தடவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்நகரில் மூன்று தினங்கள் தங்கி சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் மகாவந் பிரான்சுவா பைக்கே கருதினால் 27ஆம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச் செல்வார். (21)

## தமிழ் தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது வர்த்தகர்களின் மதிப்பீடுகளின் பிரகாரம் சுமார் 20 இலட்சம்வரைஇருக்கலாம் என தெரியவருகிறது.

நடைபாதை வியாபாரிகள் கூட இதில் விதிவிலக்குப் பெறவில்லை. அதேநேரம் தமிழ் தேசிய இராணுவத்தின் முக்கியஸ்தர்களால் தங்க நகைகள் கூட தமது மனைவி, பக்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. அதற்குரிய கொடுப்பனவுகள் கூட இறுதியில் செலுத்தப்படவில்லை என நகை வியாபாரிகள் தெரிவித்தனர்.

# விண்ணப்ப காலம் நீடிப்பு

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான விண்ணப்பங்களின் முடிவுத்திகதி இம்மாதம் 30ஆம் திகதி என கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது

முன்னர் 26ஆம் திகதி முடிவுத் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான விபரங்கள் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டு வந்த கோரிக்கைகளையடுத்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## ஒரிஸா....

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

யிருப்புப் பகுதிகளில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் குடியிருப்புக்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. கடுமையான காவல்களும் போடப்பட்டுள்ளது.சுகாதார அலுவலர்களும் தமிழ் அகதிகளின் சுகாதார சேவைகளை தீவிரமாக கவனித்து வருகின்றனர். அப்பகுதி மக்களிடம் தமிழ் அகதிகள் தாங்கள் கொண்டு வந்த தங்கநகைகள் வெளிநாட்டுப் பொருட்களான றேடியோ, டெக்,டெலிவிஷன் போன்றவற்றை விற்கிறார்கள். அதனால் பொலிஸார் தீவிரமானகண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி ஒரிஸாவில் முகாமில் இருந்து மேலும் 800 பேர் தப்பியோடிவிட்டதாகவும் அதில் ஒரு பகுதியினர் சாடுகளின் மறைந்திருந்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இவர்களை தேடும் பணியில் 2000 பரா இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகி றது. இத் தப்பியோடிய சகலரும் ஈ.பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அறியவருகின்றது. இதுபற்றி ஒரிஸா மாநில முதலமைச்சர் பட்நாய்க் கருத்துத் தெரிவிக்கையில் இச்சம்பவம் குறித்துதாம் ஆச்சரியம் அடைந்ததாகவும்,

## மும்மொழிகளிலும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகப் புத்தளத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த சமயம் தெரிவித்தார்.

செயலாளர்கள், தொழிற் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு அமைச்சினதும், ஜனாதிபதியினதும் முடிவுகளை தெரிவிக்க வேண்டும் என்றும், தேசிய திட்டங்களைச் செயற்படுத்தும்போது மாகாண சபைகளுடன் சேர்ந்து அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றார்.

## அமைச்சரவையிலும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாமென்றும் ஆளுங்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அரசாங்கத்தில்தூய்மையை ஏற்படுத்தி மக்களின் நம்பிக்கையைப் பெறும் முயற்சியில் ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியாக இருப்பதாகவும் தாம் பதவிக்கு வந்தவுடனேயே தமது கடமைகளைச் சரியாகவும் நேர்மையாகவும் செய்யத்தவறும் அமைச்சர்களையும் எம.பி.க்களையும் தூக்கி எறியத் தயங்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி பிரேம தாஸா குறிப்பிட்டிருந்ததையும் ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொலிசாருக்குப்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தியிருந்தனர். வாகனத்தை அப்பகுதியில் இருந்து எடுக்கும்படி பொலிசார் சொல்லியும் கேட்க மறுத்துவிட்டனர். இதன் பின்னர் விடுதலைப் புலிகள் சென்று அந்த வாகனத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையும் எடுத்துக் காட்டுகின்றது. அன்னையின் தியாகம் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது உலகிலே வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களின் விடிவுக்கும் வழி வகுத்தது'' என அதிபர் க. சிற்றம்பலம் நேற்று இரவு கன்னாதிட்டி காளி கோயிலின் முன்றலில் நடைபெற்ற அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டின் நிறைவையொட்டி நடாத்தப் பெற்ற முதலாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில்உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:

... எங்கள் எல்லோருக்கும் ஏற்படவேண்டும் என்றார். இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணப் பிரதேச விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் திரு. பொன்னன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் திரு. சத்தியசீலன், செல்வி மீரா ஆகியோருட்பட பலர் உரை ஆற்றினார்கள். இக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு, அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிந்து மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

# வன்னியிலும் கூட்டங்கள்

(நெடுங்கேணி)

இன்றைய கால கட்டத்தில் உலக சரித்திரத்தில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் தியாக வரலாறு முக்கிய இடம் பெற வேண்டும்.

இவ்வாறு அன்னை பூபதியின் நினைவு விழாக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நெடுங்கேணிப் பிரதேச பொறுப்பாளர் திரு. சேரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்ததாவது:

இன்று உலகளாவிய ரீதியிலே போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னணியின் உள்ளத்தைப் பல நாட்டுத் தலைவர்களும் பகிரங்கமாக ஏற்றுள்ளனர்.

அதேபோலத் தியாகிகள் வழியிலும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை - தியாகச் செம்மல் திலீபன் ஆகியோரும் முன்னணியில் இடம் பெற்றுள்ளனர் என்றார்.

## கிறிக்கெற் கோவளம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கோவளம் இளைஞர் மன்றத்திற்கும் காரை விளையாட்டு கழகத்திற்குமிடையில் நடைபெற்ற 20 ஓவர் மென்பந்து கிரிக்கெற் போட்டியில் கோவளம் இளைஞர் மன்றம் 136 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

வாரிவளவு நல்லியக்க சபையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் அரையிறுதி போட்டியில் இவ் வணிகள் பங்குபற்றின. முதலில் துடுப்பெடுத்தாடிய கோவளம் இளைஞர் மன்றஅணி 20ஓவர்களில் 8 விக்கெற் இழப்பிற்கு 152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. சிவகணேசன் திறமையாக துடுப்பெடுத்தாடி 72 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து ஆடிய காரைவிளையாட்டுக் கழகம் 73 ஓவர்களில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது.

(பூநகரி)

பூநகரி விவசாயிகளிடமிருந்து ஒரு மூடை பச்சைப் பெருமாள் நெல்லை 525 ரூபாவாக கொள்வனவு செய்து அதற்கான பணத்தினை புரட்டாதி மாத முதல்வாரததில் 650 ரூபாவாக விவசாயிகளுக்கு வழக்கப்படுமென்றும் பூநகரி ப நோ. கூ. சங்கம் பிரசுரம் மூலம் மக்களுக்கு அறிவித்துள்ளது.

## தெற்கில்-.,

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை குமனனை விலங்குப் பகுதியில் 31 தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் கைதுசெய்யப்பட்டதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களிடம் இருந்து இரண்டு ஜி. 3 ரக துப்பாக்சிகளும், நான்கு ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளும், நான்கு இடைவிடாது சுடக்கூடிய துப்பாக்கிகளும், மூன்று தன்னியக்க கைத்துப்பாக்கிகளும் அவற்றிற்குத் தேவையான ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மேலும் கடந்த வாரத்தில் அரிசி லொறி ஒன்றை தமிழ் தேசிய இராணுவத்தின் சுடத்த முற்பட்டு கைது செய்யப்பட்டமை தெரிந்ததே

## மரண அறிவித்தல்

### நாகமுத்து செல்லத்துரை

### காலமானார்.

ஏழாலையைச் சேர்ந்த செல்லத்துரை (1[illegible] 03. 90) அன்று காலமானார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம், காலம் சென்ற அ[illegible]லிங்கம், பவளராணியின் (ஈழநாதம்) தந்தையும், [illegible]ந்திராணி, சந்திரசேகரம் ஆகியோரின் சிறிய தந்தையும், விஜயரத்தினம் ஞானசேகரம் (அஸ்பெற்டோஸ் ஊழியர்) அவர்களின் மாமனாரும், தேவிகா (ஜேமன்) இராமமூர்த்தி (தைவான்) விஜேய் சசிகலா (டென்மார்க்) சிறீதர் (டென்மார்க்) விவேகானந்தன்விஜி (ஜேர்மன்) ரவிக்குமார், யாழினி (யாழ். மெதடிஸ் மாணவி) சுதர்சன் ஆகியோரின் பேரனும், ஸீனா (ஜேர்மன்) டெனிசியா, ஜனிஸ் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 20.03.[illegible] அன்று (இன்று) அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் யாவர்க்கும் அறியத் த[illegible]றோம்.

ஏழாலை மத்தி.

தகவல்:

[illegible]ா. பவளராணி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.